குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 25] விசுவாவசு ஆண்டு தைத் திங்கள் 10—2—66 [இதழ்



ஸ்ரீ வனதுர்க்காதேவி நூதன ஆலயம்

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீகுருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

ஆருறு தத்துவநீ
அன்றென் றறிந்தனையே
ஆருறும் கண்டறிவன்
ஆயினையே—மாருமல்
உன்னறிவில் ஆனந்தத்
தோங்கினையே ஓராமல்
நின்னறிவை விட்டதுவாய்
நில். (37)

ஆசிரியர் :-

வித்துவான்,
சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

வித்துவான்,
சி. அருணைவடிவேல் முதலியார்.

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 25 | 10-2-66 | இதழ் 3

உட்பொருள்

எண்		பக்கம்
1	பெருஞ்சாந்தி ...	57
2	ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை ..	61
3	சித்தாந்த வினாவிடை ...	68
4	"ஆலவாய்" என்னும் பெயர் வழக்கு ...	73
5	திருக்களிற்றுப்படியாரும் நாயன்மார்களும் ...	77
6	முத்து அடிவருடும் முதல்வன் ...	83
7	கல்லாடம் - திருக்கோவையார் ...	88
8	கடிதம் ...	93
9	வேலூர் இலவச சித்த வைத்தியசாலை ...	95
10	மடாதிபதிகள் மாநாடு ...	99
11	செய்திகள் ...	102
12	எதிர்காலம் ...	110
13	Extract from the Visitors' Book	67, 72, 82, 87, 94, 98

அட்டைப் பட விளக்கம் :— தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்த பரவசர் பூங்காவிலுள்ள ஸ்ரீ வன துர்க்காதேவி நூதன ஆலயம் 4—2—66 ல் மகாகும்பாபிஷேகம் செய்விக்கப்பெற்றது.

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 25] விசுவாவசு - தை - 10—2—66 [இதழ் 3

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

பெருஞ்சாந்தி

எல்லாம் வல்ல முழுமுதற் பொருளை, 'கடவுள்' எனக் குறித்தனர் தமிழ்ச் சான்றோர். 'எல்லாவற்றையும் கடந்தது' என்பது இதன் பொருள். எல்லாவற்றையும் கடந்ததாயினும், எல்லாப் பொருளிலும் அது, நீக்கமற நிறைந்தும் நிற்கின்றது. இதனைக் குறிக்க, 'இறை' என்ற பெயரையும் அதற்கு இட்டனர் அன்னோர். இறை - இறுத்தலை - தங்கி நிற்றலை யுடையது. இன்னும் எல்லாப் பொருளிலும் தங்கிநின்று அவற்றை இயக்குவது என்றற்கு, 'இயவுள்' என்ற பெயரையும் கூறினர். 'இறை, கடவுள், இயவுள்' என்ற மூன்று

சொற்களும், சைவ சித்தாந்தத்தில் 'ஒன்ருய், வேருய், உடனுய் இருப்பது' என்று கூறும் இறைநிலையைக் குறித்து நிற்றல் அறியத்தக்கது.

பொருள் தன்மையால் வேருயும், கலப்புத் தன்மையால் ஒன்ருயும், உயிர்க்கு உயிராதல் தன்மையால் உடனுயும் நிற்கின்ற இறைவனை உயிர்கள் காண்பது வழிபாட்டினுல் தான்.

'சிறப்பு வழிபாடு, பொது வழிபாடு' என வழிபாடு இரு வகைப்படும். சிறப்பு வழிபாடாவது, 'கடவுள்' எனக் குறிக்கப்பட்ட அவ்வுண்மைநிலையைக் கண்டு அறிவு மாத் திரத்தால் வழிபடுதல். அங்கே மன வாக்குக் காயங்கட்கு வேலையில்லை. இது, பரம ஞானிகட்கே இயல்வது; ஏனை யோர்க்கு இயலாதது. இதனை, திருநாவுக்கரசு நாயனுர்,

> *"ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்*
> *ஞானத் தால்தொழு வேன்உனை நானலேன்"*

என்று கூறுகின்ருர்.

பொது வழிபாடாவது. இறைவனை, 'அருவம், அருவுரு வம், உருவம்' என்னும் வடிவங்களில் கண்டு, மன மொழி மெய்களால் வழிபடுவது. இவற்றுள்ளும், அருவ வழிபாடு, அட்டாங்க யோகமும் கைவரப் பெற்று, தாரணை, தியானம், சமாதி என்பவற்றில் பழகிய சிறந்த யோகியர்கட்கே இயலும்; ஏனையோர்க்கு இயலாது. அருவுருவத் திருமேனி இலிங்கம். உருவத் திருமேனிகள் நடராச மூர்த்தம், சோமாஸ்கந்த மூர்த்தம் முதலாகப் பல உள்ளன. இவைகளைத் திருக் கோயிலிற் சென்று கண்டும், தம் தம் இல்லத்தில் வைத்தும் வழிபடுதல் பலருக்கும் இயல்வதாகும். என்ருலும், இல்லத் தில் வைத்து வழிபடும் வாய்ப்பும் பலருக்குக் கிடைத்தல் அரிது. ஏனெனில், அதற்கு வேண்டிய காலம், இடம், துணை, பழக்க வழக்கங்கள் முதலியவை எல்லார்க்கும் அமைதல் இயலாது. ஆகவே, திருக்கோயிலில் சென்று ஆங்கு இருக்கும் திருமேனிகளில் இறைவனைக் கண்டு வழி படுதலே யாவர்க்கும் கூடுவது. அதனுல், திருக்கோயில்கள் அளவற்றன நம் நாட்டில் காணப்படுகின்றன.

எல்லா உலகங்கட்கும் அப்பாற்பட்ட இறைவன், ஆன்மாக்கள் பொருட்டு, திருக்கோயிலுள் இருக்கும் திருமேனிகளில் நின்று, அவர்கள் செய்யும் வழிபாடுகளை ஏற்றுக்கொண்டு, 'இம்மை, மறுமை, வீடு' என்பவற்றில் அவரவர்கள் வேண்டிய பயனை அவரவர்கட்கு அருளுகின்றான்.

" தாபர சங்க மங்கள் எனும்இரண் டுருவில்நின்று
மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருணைவைப்பன் "

என்பது சிவஞான சித்தியார். தாபரம் - திருக்கோயிலில் இருக்கும் திருவுருவம். சங்கமம் - அடியார்கள்.

இறைவன் மற்றைய இடங்கள்போல அல்லாமல் திருக்கோயிலில் இருக்கும் திருமேனிகளில் இருந்து அருள்செய்வது, மந்திர சாந்நித்தியத்தினாலேயாம். இஃது அத்திருமேனிகளில் உண்டாகச் செய்வதே, 'பெருஞ்சாந்தி' எனப்படும். 'மகாகும்பாபிடேகம்' என்று சொல்லப்படுவது இதுவே. புதியனவாய் அமைக்கப்படும் ஆலயங்களில் இது முதலாவதாகச் செய்யப்படல் வேண்டும். அதன்பின்பே, நித்திய பூசைகளும், நைமித்திகமான விழாக்களும் செய்தற்குரியன. பழமையாய் உள்ள ஆலயங்களிலும், இம் மந்திரசாந்நித்தியம் நீங்காதிருத்தற் பொருட்டு, அவ்வப்பொழுது பெருஞ்சாந்தி செய்யப்பெறல் வேண்டும்.

திருக்கோயிலுள் இருக்கும் திருமேனிகளில் செய்யும் பலவகை வழிபாடுகளுள் பெருஞ்சாந்தி தலையாயது. அதனால், இது நடைபெறும் இடங்களில் மக்கள் இன்றியமையாது சென்று, கண்டு வழிபட்டுப் பயன்பெறுதல் வேண்டும்.

" மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல் "

என்னும் கருத்தினைத் திருஞானசம்பந்தர், திருமயிலாப்பூர்த் திருப்பதிகத்தில் பலவகையாக விளக்கியருளத் தொடங்கி' 'ஐப்பசி ஓணவிழா, கார்த்திகை விளக்கீடு, ஆதிரைநாள், தைப்பூசம், மாசிக் கடலாட்டு, பங்குனி உத்திரவிழா' முதலியவைகளைக் குறிப்பிட்டு, முடிவில்,

" பெருஞ்சாந்தி காணுதே போதியோ பூம்பாவாய் "

என்று அருளினர். இதனுல், இச்சிறப்பு வழிபாட்டினைச் சென்று கண்டு வணங்குதல், மக்கட் பிறப்பு எடுத்ததன் பயனுகும் என்பது தெளிவு.

இப் பெருஞ்சாந்தி விழா, திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமாயுள்ள சிவாலயங்களிலும், குருமூர்த்த ஆலயங்களிலும், இவ்வாதீனத்தில் இப்பொழுது 25 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்து அருட்செங்கோல் ஓச்சிவரும் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் திருவுளப் பாங்கின்வண்ணம் ஆங்காங்கு மிகச் சிறப்பாக நடைபெறு கின்றது. அவ்வகையில், அன்பர்கள் அண்மையில் தருமை யிலே கண்டு களித்த பெருஞ்சாந்தி, ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் நூதனமாக அமைக்கப்பெற்ற ஸ்ரீவனதுர்க்காதேவி ஆலயப் பிரதிட்டையின் மகாகும்பாபிடேகமாகும்.

இறைவன் சத்தியும் சிவமுமாய் இருப்பவன். அதனுல், அவனது வடிவங்களும் பலவகைச் சத்திபேதங்களாகவும், பலவகைச் சிவபேதங்களாகவும் காணப்படுகின்றன. சத்தி பேதங்களில் ஒன்ருய் விளங்குபவள் துர்க்கை. இவள் நாட்டிலும், காட்டிலும் கோயில்கொண்டு, பலவகையான வழிபாடுகளை ஏற்றுப் பலவகையான பயன்களை அன்பர்கட்கு அருளுகின்ருள். காட்டில் எழுந்தருளியிருந்து அவ்விடத் தைத் தனக்கு உரியதாகக் கொண்டிருப்பதால் ' காடுகிழாள் ' என்றும், ' வனதுர்க்கை ' என்றும் சொல்லப்பெறுகின்ருள் வெற்றியைத் தருவதால் ' கொற்றவை ' எனப்படுகின்ருள். இத் தேவியை வழிபடுவதால், நாட்டிலும், காட்டிலும், மற்றும் எவ்விடத்திலும் வெற்றி உண்டாகும்; அசுரர் போன்ற தீயவர்களாலும், தீத் தெய்வங்களாலும் வருகின்ற அச்சங்கள் நீங்கும்; எண்ணிய எண்ணியாங்கெய்த இன்பம் பெருகும். இவ்வாய்ப்புக்களெல்லாம் தருமையாதீன ஸ்ரீ வனதுர்க்காதேவி பெருஞ்சாந்தியைத் தரிசித்த அன்பர் களுக்கு உண்டாயினமை குறிப்பிடத்தக்கது. மற்றும் இதுபோன்ற வாய்ப்புக்கள் பல அன்பர்களுக்குக் கிடைப் பனவாக.

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் வழங்கியருளிய

அருளுரை

பாச நீக்கம்.

வாக்கில்உரை பொய்யே; மனம்நினைப்ப தும்கவடே
ஆக்கைதினம் செய்வ தகிர்த்தியமே—நோக்கிப்
திரிவிதமும் இப்படிநீ செய்வித்தால் முத்தி
தருவிதமென் சொக்கநா தா.

இக்காலத் தின்னவினை என்றமைப்பை அப்படியே
அக்காலத் தவ்வூழ் அருத்திடுவை—இக்காலம்
தப்புவார் உண்டோ? தமியேற்கும் தப்பரிதேன்
அப்பனே சொக்கநா தா.

மோகாபி மானம்இன்னும் முற்றும் மறக்கவில்லை
தேகாபி மானம் சிதையவில்லை—ஓகோ
உனையடைந்தும் பாசம் ஒழியவில்லை கூடல்
தனையடைந்த சொக்கநா தா.

—குருஞானசம்பந்தர்.

சமய நூல்களிற் சொல்லப்படும் சாதனங்களில் நின்று அடையும் பயன் இரண்டு என்று சைவசித்தாந்தம் கூறும். ஒன்று பாச நீக்கம்; மற்றொன்று சிவப்பேறு. பாசம் நீங்கினால் துன்பம் நீங்கியதாகும். ஆனால், துன்பம் நீங்குதல் மட்டும் போதியதன்று; இன்பமும் வேண்டும். அது சிவமாந் தன்மையைப் பெறுவதனாலேயே உண்டாவதாகும். அதனால்தான் சைவ சித்தாந்தம், பாச நீக்கத்தை முடிந்த பயனாகக் கூறாது, சிவப்பேற்றையே முடிந்த பயனாகக் கூறுகின்றது.

நோயுடையவன் நோயினுல் உண்டாகும் துன்பம் நீங்க வேண்டும் என்றுதான் முதலில் விரும்புகிருன். விரும்பி அதற்கேற்ப முயலுகின்ருன்; நோய் நீங்கிய பின்னர் அதுவே போதும் என்று அவன் இருப்பதில்லை. உடல் மெலிவு நீங்கி வலிமை பெற வேண்டும் என்று விரும்பி அதற்கு ஆவனவற்றை அறிந்து செய்துகொள்கின்ருன். அதுபோலவே, பாசம் நீங்கிய ஆன்மாவும், அதனேடு நில்லாது சிவத்தை அடைய விரும்பி அதற்கு ஆவனவற்றைச் செய்யும். இதுதான் உண்மை. ஆயினும் சிலமதங்கள் பிறவித்துன்பம் நீங்கினுல் போதும் என்கின்றன,

பாச நீக்கம் என்பது, அதன் வாசனையும் இல்லாது முற்றும் நீங்குதலேயாகும். பாசம், ஆணவம், கன்மம், மாயை என மூன்று, ஆணவம், 'இதனை யான் செய்தேன்' என்று தன் செயலுக்குத் தன்னையே தலைமையாக மதிக்கவும், தன்னிடம் உள்ள பொருளை, 'எனது' எனத் தனக்கு உரியதாகவே மதிக்கவும் செய்யும். இவ்வாறு மதித்துத் தனது செயலிலும், பொருளிலும் வைக்கும் பற்றே 'அபிமானம்' எனப்படும்.

கன்ம மலம், இன்பத்தையும் துன்பத்தையும் சேர்ப்பிக்கும். அதனேடு வாராத இன்பத்தை வருவிக்கவும், வந்த இன்பத்தைக் காக்கவும், வரும் துன்பத்தைத் தடுக்கவும், வந்த துன்பத்தைப் போக்கவும் இயன்ற முயற்சிகளையும் உண்டாக்கும். மாயா மலம், மனவாக்குக் காயங்கள் என்னும் முக்கரணங்களாய் நின்று, ஆணவ கன்மங்களுக்கு ஏற்றவாறு செயற்படும். இவை அனைத்தும் ஞானத்தைப் பெறும்முன் இவ்வாறே நடைபெறும். ஞானத்தைப் பெற்றபின், மேற்சொல்லிய அபிமானங்கள், முயற்சிகள் என்பனவற்றுள் ஒன்றும் இன்றி, 'எல்லாம் உன் உடைமையே; எல்லாம் உன் அடிமையே எல்லாம் உன்னுடைய செயலே' (தாயுமானவர்) என்று எல்லாவற்றையும் இறைவன் பால் ஒப்பித்துவிட்டு அமைதியாய் இருக்கும்நிலை உண்டாகும், இவ்வமைதி நிலை ஞானம் முதிரப்பெற்ற பின்னேயாம். தொடக்கநிலையில் இரண்டுமல்லாத இடைப்பட்ட நிலை தோன்றும். அஃதாவது, மும்மலங்களின் சேட்டை முன் போல முழுவதும் தலைவிரித்தாடாமலும், அவ்வப்பொழுது சிறிது சிறிது நிகழ்வதும், இறைவன் திருவருளிலேயே அழுந்தி விடுவது என்பது இல்லாமல், சிற்சில சமயம் அதனினின்றும் நீங்கி மும்மலச் சேட்டையால் சிறிது சிறிது தாக்கப்படுவதுமான

ஒரு நிலை தோன்றும். இந்த இடைப்பட்ட நிலையில் ஞானம் பெற்றவர்கள் என்செய்வது என்று வருந்துவார்கள். அதற்கு அவர்களுக்கு உள்ள ஒரேவழி, இறைவனை நோக்கி முறையிட்டுக் கொள்வதுதான். ஞானம் முதிரப்பெற்றவர்களுக்கும் இந்நிலை எப்பொழுதாவது உண்டாகும். அதற்குக் காரணம், உடம்பு நீங்காதிருத்தலே. நால்வர் பெருமக்களுள் திருஞானசம்பந்தர் பாடலில் இந்நிலை,

" இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன் "

' செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐய னேஅஞ்ச லென்றருள் செய்எனை "

என்றாற்போல ஒன்றிரண்டு இடங்களில் மட்டுமே காணப்படு கின்றது.

" சித்தத்துள் ஐவர் தீய செய்வினை பலவும் செய்ய
மத்துறு தயிரே போல மறுகுமென் உள்ளந் தானும் "
(அப்பர்)

" ஐவர் கொண்டிங் காட்ட ஆடி
ஆழ்குறிப்பட் டழுந்து வேனுக்கு
உய்யு மாமென் றருளிச் செய்யீர் " (சுந்தரர்)

" புலன்கள் திகைக்க யானும் திகைத்துஇங்கோர்
பொய்ந்நெறிக்கே
விலங்குகின் றேனை விடுதிகண்டாய் "
(மாணிக்கவாசகர்)

என்றாற்போல ஏனைய ஆசிரியன்மாரது பாடல்களில் இந்நிலை ஆங்காங்குச் சில இடங்களிற் காணப்படுகின்றது. அவ்வகையில் எங்கள் ஆதி குருமூர்த்திகள் திருவாக்கிற் போந்த சில வெண்பாக்களே முதலிற் கொடுக்கப்பட்டவை.

மும்மலங்களுள் மாயாமலம் நன்கு விளங்கி நிற்பது. எவ்வாறெனில், மாயையின் காரியமே தனு கரண புவன போகங்கள்; அவை நம்மால் நன்கு அறியப்படுகின்றன; ஆதலின், மாயாமலம் நன்கு விளங்கி நிற்பதொன்றும்.

கன்ம மலம் விளங்கியும் விளங்காதும் நிற்கின்ற ஒன்று. ஏனெனில், நமக்கு உண்டாகின்ற இன்ப துன்பங்களை அநுபவித்து, 'இஃது இன்பம்; இது துன்பம்' என நாம் அறிகின்றோம். ஆயினும் இவற்றிற்கு முதற்காரணமாயுள்ள நல்வினை தீவினைகளை நாம் அநுபவமாக அறிய இயலவில்லை. ஆகையால், கன்ம மலம் விளங்கியும் விளங்காமலும் நிற்பதாம்.

இனி ஆணவமலம் விளங்காமலே நிற்பதாம். ஏனெனில், ஆணவமலத்தின் காரியம் அறியாமை. அறியாமையை நாம் அறிய இயலாது. 'அறியாமை' என்பது இங்கு, சிறிதும் அறியாமையையும், தவருக அறிவதையுமே குறிக்கும். அவாய் நிலையும், ஐயமும் அறிவோடும் கூடினவாகலின், அவை அறியாமை எனப்படா. அறியாமையாகிய அவ்விரண்டையும், நாம் அறிதல் இயலாது. அஃதாவது, ஒவ்வொருவருக்கும், 'எனக்கு இது தெரியும்' என்பதுதான் தெரியுமேயன்றி, 'எனக்கு இது தெரியாது' என்பது தெரியாது. தெரிந்தபின்புதான் முன்பு தெரியாதிருந்தது தெரியும். அவ்வாறே ஒவ்வருவரும் தாம் அறிந்ததைச் சரியாக அறிந்திருக்கின்றோம் என்று அறிவார்களேயன்றி, நாம் தவருக அறிந்திருக்கின்றோம் என்பதை அறியமாட்டார்கள். பின்பு சரியாக அறிந்துகொள்ளும்பொழுதுதான், முன்பு தவருக அறிந்திருந்தோம் என்பதை அவர்கள் அறிவார்கள். ஆகையால், அறியாமை அஃது இருக்கும்பொழுது அறியப்படுதல் இல்லை, அறிவினல் நீங்கியபின்புதான் அஃது அறியப்படுகின்றது. அதனையே தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனர்,

'' அறிதோ றறியாமை கண்டற்று ''

என்று அருளிச்செய்தார். தவருன அறிவு அல்லது விபரீத ஞானம், உண்மை யறிவு அல்லது மெய்ஞ்ஞானம் போலவே நமக்குத் தோன்றுகின்றது. இதனை,

'' அறிவு போல்அடர்ந்தெழும்அறி யாமையின் வலியால் ''

என்று காஞ்சிப்புராணத்துள் அழகுபடக் கூறியிருத்தலைக் காணலாம். புறஇருள் பிற பொருள்களைக் காட்டாது மறைப்பினும், தன்னைக்காட்டும்; ஆனல் அக இருளாகிய ஆணவ மலம் பிறவற்றைக் காட்டாது மறைப்பதுடன், தன்னையும் காட்டுவதில்லை என்பதை,

" ஒருபொருளுங் காட்டாது இருள்உருவம் காட்டும்;
இருபொருளுங் காட்டாது இது "

என்று உமாபதிசிவாசாரியர் தமது திருவருட் பயனில் நயம்படக் கூறுகின்றார். ஆகவே, ஆணவமலம் நம்மால் அறியமுடியாத ஒன்றாகவே உள்ளது.

அறியப்படுவது பருப்பொருள் அல்லது தூலப் பொருள். அறியப்படாதது நுண்பொருள் அல்லது சூட்சுமப் பொருள். ஆகவே அறிவதற்கு எளிதாகிய தூலப் பொருளிலிருந்து' அறிவதற்கரிய சூட்சுமப்பொருளை உணரவேண்டும். அம்முறையில் எங்கள் ஆதிபரமாசாரிய மூர்த்திகள் மேற்குறித்த மூன்று பாடல்களிலும் முறையே 'மாயை, கன்மம், ஆணவம்' என்பவற்றின் சேட்டைகள் தம்மிடத்திலும் சிற்சில வேளைகளில் தலைகாட்டுவதை எடுத்துக்கூறித் தமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்கநாதப் பெருமானிடம் விண்ணப்பிக்கிறார்கள்.

'தனு, கரணம் புவனம் போகம்' என்னும் நான்கில், தனுவும் கரணமுமே உயிரோடு ஒன்றாய் நிற்பன. அவற்றை வேறொரு வகையில் மூன்றாகக் கூறுவர். அவை, 'மனம், வாக்கு, காயம்' என்பன. இம்மூன்றும் தமது நெறிக்கு மாறாய் நிகழ்கின்றன என்று அவர்கள் கூறுகின்றார்கள். அதாவது, 'வாக்கினின்றும் உண்டாகின்ற சொற்களெல்லாம் பொய்ம்மொழிகளாகவே உள்ளன; மனத்தில் உண்டாகின்ற எண்ணங்களெல்லாம் வஞ்சனையான எண்ணங்களே. உடம்பினால் நிகழும் செயல்கள் எல்லாம் தகாத செயல்களே; முக்கரணங்களும் இப்படி என்றால், நான் நன்மையை அடைவது எப்படி? என்று கேட்கின்றார்கள். ஆனால், 'இவையும் உன்னுடைய செயல்தானே? ஏன் இப்படிச் செய்கின்றாய்' என்று சிறிது உரிமையுடன் கேட்கின்றார்கள். இதுதான், அவர்களுக்கும் நம்போன்றவர்களுக்கும உள்ள வேறுபாடு. அஃதாவது, மனமொழி மெய்கள் தவறாகச் செயற்படுகின்றன என்பதை அவர்கள் உணர்கிறார்கள்; உணர்ந்து அதற்காக வருந்துகிறார்கள்; வருந்தி அது நீங்குவதற்கு இறையருளை நாடுகிறார்கள், நாம் அதுபற்றிச் சிறிதும் கவலை கொள்வதில்லை; மாறாகச் சிலவேளைகளில் மகிழ்ச்சியும் அடைகிறோம். (கபடம் - கபடு, கவடு என வந்தது. ஆக்கை - உடம்பு. அகிர்த்தியம் - தகாத செயல்.)

மனம் வாக்குக் காயங்கள் இப்படித் தவருகச் செல்வதற்குக் காரணம் வினையே என்று அவர்கள் கருதுகிருர்கள். கருதி, 'வினையை ஊட்டுபவன் நீதானே' என்று சொல்லி, 'நீ வினையை ஊட்டுவிக்கும்போது அதிலிருந்து தப்புவோர் எவரேனும் உண்டோ? இல்லை. நான்மட்டும் எப்படித் தப்பமுடியும்? என்று தமது வருந்தத்தக்க நிலையைப் புலப்படுத்திக்கொள் கிருர்கள். 'உனது அருளுக்கு உரியவனுன எனக்கும் இந்த நிலைதானே? என்பது குறிப்பு.

மன வாக்குக் காயங்கள் தவருகச் செல்வதற்கு வினை காரணம்; வினைக்கு ஆணவமலம் காரணம் என்பதை அவர்கள் முடிவாகத் தெரிவிக்கிருர்கள். யான் எனது என்னும் அபிமானங்களைத் தோற்றுவிப்பது ஆணவமலமே என்பது முன்பே குறிப்பிடப்பட்டது. எனது என்னும் அபிமானத்திஞல் பிற பொருள்களின்மேல் வைக்கும் பற்றினை 'மோகாபிமானம்' என்றும், உடம்பை யான் என்று கருதும் அபிமானத்தால் அதன்மேல்வைக்கும் மிகுந்த பற்றினையே 'தேகாபிமானம்' என்றும் அருளிச்செய்தார்கள். 'இவை இன்னும் முற்றும் நீங்க வில்லை' என்றதனுல், ஆணவமலச்சேட்டை இன்னும் சிறிது உள்ளது என்பதே கருத்தாகும். இறைவன் திருவருளைப் பெற்றும் இங்ஙனம் மும்மலங்களின் சேட்டை ஒழியவில்லை என்பதை, "ஓகோ உனையடைந்தும் பாசம் ஒழியவில்லை" என்று சிறிது வியப்போடுங்கூட அவர்கள் முறையிட்டுக் கொள்வதைக் காணலாம். அருணகிரிநாதரும்,

"மகமாயை களைந்திட வல்லபிரான்
முகம்ஆறும் மொழிந்தும் ஒழிந்திலனே
அகமாடை மடந்தையர் என்றயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே"

என்று அருளுகின்ருர். இவைகளால், இறைவன் திருவருளைப் பெற்றவர்களும் நம்மைப்போலவேதான் துன்பம் கூறுகின்ருர் கள் என்று நினைத்தல் கூடாது. எப்பொழுதோ சிற்சில சமயங்களில் இந்நிலை தோன்றுதற்கே அவர்கள் இவ்வாறு வருந்துகின்ருர்கள். நாம் எப்பொழுதும் உள்ள துன்ப நிலையை அறியாமலே மகிழ்ந்திருக்கின்ருேம்.

" தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார் "

என்ற திருக்குறளோடு இதனை ஒப்பிடலாம்.

திருவருள் பெற்றபின்னுங்கூடப் பாசங்கள் ஒழியாது, சிறிது சிறிது வந்து தாக்குகின்றன என்றால், அவைகளின் வலிமையை என்னென்பது! அவைகளை நாம் எப்படிப் போக்கிக் கொள்வது! பாசங்களினின்றும் நாம் நீங்குவதற்கு வழியாகவே, இத்தகைய அருள்வாக்குகள் தோன்றியுள்ளன. இவைகளை நாம் ஓதியும், உணர்ந்தும் பாச நீக்கம்பெற்று உய்வோமாக.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagadeswaraswami Devasthanam, Tirucadayur.

திருக்கடவூர் தேவஸ்தானத்துக்கு நாங்கள் வந்து உக்ர ரத சாந்தியும் அபிஷேகங்களும், செய்வித்து ஆண்டவன் அனுக்கிரகத்துக்குப் பாத்திரர்கள் ஆனோம். நாங்கள் இங்கு ரெஸ்ட் ஹவுசில் தங்கி இருந்தவகையிலும், தேவஸ்தான சுவாமி தரிசனம் செய்த வகையிலும், எங்களுக்கு ஆதீனம் எல்லா சிப்பந்திகளும், நல்ல உபசாரத்துடன் வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்தது பாராட்டத்தக்கது. கடவூர்தேவஸ்தானமும் ஸ்ரீலஸ்ரீ பண்டாரசந்நிதி சுவாமிகளும், அமிர்தகடேசவரசுவாமி திருவருளாலும், அபிராமிஅம்மன் திருவருளாலும் நீண்ட ஆயுள் நல்கி இருக்கவேணுமாய் பிரார்த்திக்கின்றனம்.

இங்ஙனம்,

(Sd.) Y. N. Sree Ramulu
Trustee
Sri Padaleswavar
Devasthamam
Tiruppapuliyur.
23—1—66.

(Sd.) S. R. P. Ponnusamy
Chettiar M. L. C.
Manufacturing Agent
Sivananda Mills
Ramprakash Periasamy Road.
R. S. Puram, Coimbatore.
23—1—66.

சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 24, இதழ் 12, பக்கம் 695இன் தொடர்ச்சி)

ஐம்பொறிகள் உயிராகாமை

மாணாக்கன் : 'உயிர் சூனியமன்றி, உள்ளதே' எனவும், 'அதுதான் உடம்பன்று' எனவும் உணர்ந்தபின்னர் உயிரைப் பற்றிய பொருந்தாக் கூற்றுக்கள் தோன்றக் காரணமில்லை யன்றோ ?

ஆசிரியர் : மேலும் சில பொருந்தாக் கூற்றுக்கள் உள; அவற்றுள் முன்னிற்பது, 'உடம்பு உயிரன்று என்பது உண்மையே; ஆனால், உடம்பின்கண் உள்ள, 'மெய், வாய், கண், மூக்கு, செவி' என்னும் ஐம்பொறிகள் உயிராம்' என்பது

மாணாக்கன் : 'உடம்பை உயிரன்று' என்றபின், அவற்றின் பகுதியாகிய ஐம்பொறிகளை உயிர் என்றல் எப்படி ?

ஆசிரியர் : 'உடம்பு உயிரன்று எனல், உடம்பு முழுதையும் பொதுமையிற் குறிப்பதன்றி, ஒரு பகுதியைச் சிறப்பாகக் குறிப்பதன்று; ஆதலின் அதனுட் சில பகுதியை உயிரென்றல் பொருந்தும்' என்பது, 'ஐம்பொறிகளே உயிராம்' என்பாரது கருத்து.

மாணாக்கன் : அவர் தம் கொள்கைக்குக் கூறும் காரணங்கள் எவை ?

ஆசிரியர் : அறிவாவது, 'சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றம்' என்னும் புலன்கள் ஐந்தையும் அறிவதேயாகலானும், அவற்றை அறிவன ஐம்பொறிகளன்றி வேறில்லையாகலானும், ஐம்பொறிகளே உயிராகும் என்பர்.

மாணாக்கன் : ஆம்! அஃது உண்மைபோலத்தான் தோன்றுகிறது. அவர்தம் கொள்கையில் உள்ள குற்றம் என்னை ?

ஆசிரியர் : அறியாது மயங்குகின்றனை! சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், என்னும் ஐந்து புலன்களையும் ஒரு பொறியே அறிகின்றதோ ? ஒவ்வொரு பொறி ஒவ்வொன்றை மட்டும் அறிகின்றதோ ?

மாணாக்கன் : ஒரு பொறி ஒன்றைத்தான் அறிகின்றது. ஒருபுலனை அறிகின்ற பொறி, மற்றொரு புலனை அறிவதில்லை ; அஃதாவது, நாக்குச் சுவையைமட்டும் அறியும் ; ஒளி முதலிய பிறவற்றை அறியாது. கண் ஒளியை மட்டும் அறியும் ; சுவை முதலிய பிற புலன்களை அறியாது. இவ்வாறே ஏனைய பொறி களும் ஒவ்வொரு புலனைத்தான் அறியும் ; பிறவற்றை அறியா.

ஆசிரியர் : நல்லது ! ஐந்து புலன்களையும் அறிவது உயிரா ? அல்லது ஒரு புலனை மட்டும் அறிந்து, மற்றைய புலன்களை அறியமாட்டாதது உயிரா ?

மாணாக்கன் : ஒரு புலனை மடடும் அறிவதே உயிர் என்று வைத்துக்கொண்டால் என்னை ?

ஆசிரியர் : அப்பொழுது, ஓர் உடலில் உள்ள உயிர் எத்தனை என்பது ? அஃதாவது, ஓர் உடலில் ஓர் உயிர்தான் உள்ளது என்பதா ? அல்லது ஐந்து உயிர்கள் உள்ளன என்பதா ?

மாணாக்கன் : ஓர் உடலில் உள்ள உயிர் ஒன்றல்ல ; ஐந்து உயிர்கள் உள்ளன என்றே கொண்டால்தான் என்னை ?

ஆசிரியர் : அங்ஙனமாயின் ஒருபொருளைக் காண்கின்ற வன் வேறு ; தீண்டுகின்றவன் வேறு என்று இவ்வாறே ஒவ்வொரு புலனுணர்வைப் பெற்றவனும் வேறுவேறாய், ஐம் புலன்களைப் பற்றிய ஐந்தறிவும் ஒருபொருளின் அறிவாய் இல்லாதொழியவேண்டும். ஆனால் அனுபவம் அவ்வாறில்லை. ஒருவனே ஒருபொருளை, 'யான் கண்டேன் : யான் தீண்டி னேன்' என்று இவ்வாறு ஐந்தறிவுகளையும் உடையவனாகின் றான் ; ஆதலின், ஓர் உடலில் ஓர் உயிரே உள்ளது என்னாமல், ஐந்து உயிர்கள் உள்ளன என்றல், அனுபவத்திற்கு ஒவ்வாத தாகும்.

மாணாக்கன் : ' அனுபவம் அவ்வாறு நிகழ்தற்குக் காரணம், ஐந்தறிவும் ஓர் உடம்பிற் பொருந்தியிருப்பதுதான் என்றல் கூடாதோ ?

ஆசிரியர் : கூடாது ; ஏனெனில், ஓர் உடம்பில் இருப்பினும், ஒன்றன் அறிவு மற்றொன்றற்கு உண்டாதல் கூடாமையின். அது கூடுமெனின், ஐந்தும் ஐந்தறிவு என்றது தோல்வியுற்று, ஐந்தும் ஒருபொருளினது அறிவே என்பதாய் முடியும். ஆகவே, மெய்யைக் கொண்டு தீண்டியறிவதும், நாவைக் கொண்டு சுவைத்து அறிவதும், இவ்வாறே ஒவ்வொரு பொறியைக் கொண்டு ஒவ்வொரு புலனை அறிந்து ஐம்புலனையும் அறியும் பொருள், அவ்வைம் பொறிகளுக்கு வேறாயதொன்றேயாம். ஆதலின், ஐம்பொறிகள் உயிரல்ல என்பது விளங்கும்.

இன்னும், ஐம்பொறிகள் ஐம்புலன்களையறியுமே யன்றித் தம்மை அறியமாட்டா. அஃதாவது, கண் ஓர் உருவத்தைக் காணும் ; ஆயினும், ' யான் இதனைக் காண்கின்றேன் ' என்று தனது செயற்பாட்டைத் தான் உணராது, செவி, ஓசையைக் கேட்கும் ; ஆயினும், ' யான் இதனைக் கேட்கின்றேன் ' என்று தனது செயற்பாட்டைத் தான் உணராது. இவ்வாறே ஐம்பொறிகளும் ஐம்புலன்களை உணருமேயன்றித் தம் செயற்பாட்டைத் தாம் உணரமாட்டா. உயிர் அவ்வாறன்றி, ' இது குடம் ; இஃது ஆடை ' என்றாற்போலப் புலன்களை உணர்தலேயன்றி, ' யான் இவற்றைக் காண்கின்றேன் ; தீண்டுகின்றேன் ' என்றாற் போலத் தனது செயற்பாட்டையும் தான் உணரும். ஆதலின், ஐம்புலன்களை அறிவது உயிரும், அஃது அவற்றை அறிதற்குக் கருவியாய் நிற்பன ஐம்பொறிகளும் ஆதலால், ஐம்பொறிகள் உயிரல்ல என்று உணர்வாயாக.

சூக்கும தேகம் உயிராகாமை

மாணாக்கன் : ' உடம்போ அல்லது அதன்கண் உள்ள, ' மெய், வாய், கண், மூக்கு, செவி ' என்னும் ஐம்பொறிகளோ உயிரல்ல ' என்றபின், ' உயிர் ' எனக் குறித்தற்கு உயிரையன்றி வேறு யாதுளது ?

ஆசிரியர் : ' அகவுடம்பு ' என்பதொன்று உளது. நம் கண்ணுக்குக் காணப்படுதல் புறவுடம்பு. இவ்வாறு காணப்படுதல் இன்றி நுண்ணியதாய் இருப்பது அகவுடம்பு. புறவுடம்பிற்கு வேறாய் அகவுடம்பு ஒன்று உண்டென்பது, நமக்குக் ' கனவு ' என்ற ஒருநிலை இருத்தலால் விளங்கும்.

விழித்திருக்கும் நிலை ' நனவு ' எனப்படும். இந்நிலையில் புறவுடம்பு, போதல், வருதல், பேசல், காண்டல், கேட்டல் முதலிய பல தொழில்களைச் செய்கின்றது. உறக்கம் வந்து விட்டால், இவ்வுடம்பு யாதொரு செயலுமின்றிக் கிடக்கின்றது. ஆயினும், அந்நிலையில் ' கனவு ' என்பது ஒன்று நிகழக் காண்கின்றோம். அதில் நனவுக்கும், அதற்கும் சிறிதும் தொடர்பில்லாது நிகழ்கின்றன. ஆகவே, அந்நிகழ்ச்சி புறவுடம்பல்லாத வேறோர் உடம்புபற்றி வருவது தெளிவு. அதுவே, 'அகவுடம்பு' எனப்படுகின்றது. ' புறவுடம்பு, உருவுடம்பு, பருவுடம்பு, தூல தேகம் அல்லது தூல சரீரம் ' என்பன ஒருபொருட் சொற்கள். ' அகவுடம்பு, அருவுடம்பு, நுண்ணுடம்பு, சூக்கும தேகம் அல்லது சூக்கும சரீரம் ' என்பன ஒருபொருட் சொற்கள். அகவுடம்பு, மனம் முதலியவற்றால் ஆகியது; அதனால், அதை ' மனவுடம்பு ' என்றும் கூறுவர். புறவுடம்பை, ' நனவுடம்பு ' என்றும், அகவுடம்பை, ' கனவுடம்பு ' என்றும் கூறலாம்.

நுண்ணுடம்பு அல்லது சூக்கும தேகத்தினால்தான் நனவு நிலையிலும், மெய், வாய், கண் முதலிய ஐம்பொறிகளும், பிற கருவிகளும் தொழில் செய்கின்றன என்பது எல்லார்க்கும் உடன்பாடு. ஏனெனில் இவைகளோடு மனம் தொடர்புகொள்ளாவிடில் இவைசெயற்படுதல் இயலாது. ஆகவே, புறவுடம்புக்கு செயலும் உண்டாவது அகவுடம்பினாலேயாதலின், அதனையே உயிர் என்கின்றனர் சிலர்.

மாணுக்கன் : காண்டல், கேட்டல் முதலியன புறத்து நிகழ்கின்றன. ஆனால், கண்ட உருவம் இன்னது, கேட்ட ஓசை இன்னது என்பன போன்ற அறிவும், ' இதனைக் காண வேண்டும், இதனைக் கேட்க வேண்டும் ' என்பனபோன்ற விருப்பமும் அகத்தே மனத்தின்கண் நிகழ்கின்றன. அந்த மனத்திற்குமேல் மற்றொரு பொருள் இருப்பதாகத் தோன்றவில்லை. ஆகவே, சூக்கும தேகத்தையே உயிர்என்று கூறுவார் கூற்றுப் பொருத்தமுடையதுபோலவே தோன்றுகின்றது.

ஆசிரியர் : இல்லை ; அவர் கூற்றுப் பொருந்தாது. ஏனெனில், கனவின்கண் செயற்படுகின்ற சூக்கும தேகமே உயிராயின், கண்ட கனவை நனவு நிலையில் தெளிவாக அறிந்து சொல்லுதல் வேண்டும். ஏனெனில், முன்னாள் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை மறுநாள் மறதியின்றித் தெளிவாகச் சொல்லுகின்றோமன்றோ ? அதுபோல, இரவிற் கண்ட கனவை, மறுநாட் காலையில் ஏன் மறவாது நினைத்திருந்து சொல்லுதல் கூடாது ?

அனுபவத்தில் என்ன நிகழ்கின்றது? கனவு கண்டு கொண்டேயிருந்து, உடனே விழித்துக்கொண்டாலும், அப்பொழுதே அது மறக்கப்பட்டுவிடுகின்றது. தெளிவாக அறிந்து சொல்ல இயல்வதில்லை. சிற்சில நாட்களில் நேற்று இரவு நாம் கனவு கண்டோமா? இல்லையா என்று ஐயமும் உண்டாகின்றது. அதற்குக் காரணம் புறவுடம்பில் நின்று நனவு நிலையில் நிகழ்வனவற்றை அறிவதும், அகவுடம்பில் நின்று கனவுநிலையில் நிகழ்வனவற்றை அறிவதும் ஆகிய பொருள் இவ்விரண்டுடம்பிற்கும் வேருய் இருப்பதேயாகும். அஃது அங்ஙனம் சூக்கும உடம்பிற்கு வேருய் இருப்பதால்; அதனை விட்டு நனவுநிலையில் புறவுடம்பில் வந்த காலத்தில் முன் வேறு உடம்பில் நின்று அறிந்ததை மறப்பதாகின்றது அல்லது தெளிவின்றி ஒருவாறு நினைப்பதாகின்றது. ஆகவே, சூக்கும தேகம் உயிராகாது என்று உணர்வாயாக.

(தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

It was indeed most exhilarating to visit Sri Vaidya Paramaswara's Sannidhi again after a lapse of five years, my last visit being in 1961 when I accompanied Dr. Subbarayan as his Private Secretary. The management staff in the temple and the employees are so zealous in their service that one has nothing but praise for the manner in which the temple is maintained. This is entirely due to the overall enthusiasm of that great soul, Dharmapuram Atheenam who has devoted himself entirely to the service of God.

(Sd.) S. Ramachandran,
Director of Foreign Trade,
Ministry of Commerce, Delhi.

2—2—66

தருமையாதீனம்
ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் எழுந்தருளியிருக்கும்



ஸ்ரீ வனதுர்க்காதேவி

தருமையாதீனம் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் ஸ்ரீ வனதுர்க்காதேவி ஆலயத் தோற்றம்

"ஆலவாய்" என்னும் பெயர் வழக்கு

செஞ்சொற்கொண்டல்

வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ.

மொழியியல்துறை, அண்ணாமலைப்பல்கலைக் கழகம்

'தாமரை:'

செந்தமிழ்ச் சிறப்புடையது திருமதுரைத் திருநகர். 'தண்டமிழ் வேலித் தமிழ்நாட்டகம் எல்லாம், குன்றுதல் உண்டோ மதுரை கொடித்தேரான் குன்றம் உண்டாகும் அளவு' என்று பரிபாடல் கேட்கிறது. தமிழ்ச்சங்கம் முழங்கிய இத்தமிழ்த் திருநகரம் திருமாலின் உந்தியில் மலர்ந்த தாமரை; இம்மலரின் இதழ்கள் தெருக்கள்; இதழ்களின் நடுவணதாகிய பொகுட்டு, விண்ணிழி விமானத்தில் சோமசுந்தரப் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில் என்று பரிபாடல் பாடுகின்றது:

"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீரூர்; பூவின்
இதழகத் தனைய தெருவம்; இதழகத்து
அரும்பொகுட்டனைத்தே அண்ணல்கோயில்"

'புலக்கோவில்:'

அறிவுத் தராசிலே எடையிட்டுப் பார்க்குங்கால் உலகமெல்லாம் ஒரு தட்டில்; மதுரை மறு தட்டில். ஆனல் ஏற்ற மிகுந்த இந்தத் தெய்வத் திருநகரத் தட்டே தாழ்ந்தது என்பது மற்றொரு பரிபாடல் மதிப்பீடு:

"உலகம் ஒருநிறையாத் தானேர் நிறையாப்
புலவர் புலக்கோலால் தூக்க - உலகனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல் நகர்"

பலபெயர்கள் :

இத்தகு மதுரைத் தலத்திற்குப் பல பெயர்கள் புராணச் சிறப்புடன் வழங்குகின்றன. சிவபிரான் தமது சடைப்பிறையிடத்து அமுதாகிய மதுவைத் தெளித்துப் புனிதப்படுத்தியதால் 'மதுரை'; நான்கு மேகங்களும் வருணனது ஆணையால் நான்கு மாடமாகக் கூடி நின்றமையால் 'நான்மாடக் கூடல்'. பாம்பு வட்டமாய் வாலை வாயாற் கவ்வி எல்லை காட்டியதால் 'ஆலவாய்'; கடம்பமரக் காடு அடர்ந்தமையால் 'கடம்பவனம்' அன்னை பராசக்தி கன்னியாயிருந்து அருளாட்சி புரிந்தமையால் 'கன்னி புரீசம்'; சிவபிரான் தென்னவராக இருந்து ஆட்சி புரிந்த சிறப்பால் 'சிவராசதானி'; ஆன்மாக்களுக்குச் சரியை முதலிய நான்கையும் அளித்ததால் 'சமட்டி விச்சாபுரம்'; சீவன் முத்தர்கள் வாழும் சிறப்பால் 'சீவன் முத்திபுரம்'; விராட்புருடனுக்குப் பிரமரந்திரத்திற்கு மேல் பன்னிரண்டங்குலத்தில் இருப்பதால் 'துவாத சாந்தபுரம்'; வரகுணபாண்டியனுக்குச் சிவலோகம் காட்டியதால் 'சிவலோகம்'.

புராணத்திற் கூறப்பெறும் இப்பெயர்கள் அனைத்தினுள்ளும் 'ஆலவாய்' என்னும் பெயர் பற்றிய சிந்தனையே இங்கு கருதத்தக்கது.

ஆலவாய்: புராண விளக்கம்:

திருவிளையாடற் புராணத்துத் திருவாலவாயான படலம், பாம்பு வாலை வாயாற் கவ்வி மதுரைத் திருநகரின் எல்லையை வட்டமிட்டுக் காட்டியதாலேயே 'ஆலவாய்' என்ற பெயர் வழங்கலாயிற்று எனக் கூறுகின்றது. இதன்படி மதுரைத் திருநகர முழுதுக்குமே 'ஆலவாய்' என்ற பெயர் பொருந்துகின்றது. சங்கப் புலவரிலே 'மதுரைப் பேரால வாயார்' என்றொரு புலவர் காணப்படுகின்றார். 'கூடல் ஆலவாயிலாய்' என்பது திருஞானசம்பந்தர் திருவாக்கு. இவற்றை நோக்கக் 'கூடல்' என்பது தலப்பெயராகவும், 'ஆலவாய்' என்பது கோயிற்பெயராகவும் கொள்ளத்தக்கன என்பாரும் உண்டு.

நாயன்மார் காலத்தில் :

திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் போந்து வழிபட்ட கி. பி. 6ம் நூற்றாண்டில் 'ஆலவாயில்' என்பதும் வழங்கி வந்தது என்பது அவ்விரு அருளாளர்களும் பாடியுள்ள திருப்பாட்டுக்களால் அறியக் கிடக்கிறது.

திருஞானசம்பந்தர் திருவாக்கில் 'ஆலவாயான்' 'ஆலவாயி லான்' 'ஆலவாயிலார்' 'ஆலவாயரன்' என்ற தொடர்களும் 'ஆலவாய்' என்ற சொல்லும், பயின்று வருகின்றன. மற்றும், 'ஆலவாயிலாய்' என்றும், 'ஆலவாயில் உறையும் எம்மாதியே' என்றும் அச்சான்றோரே பாடுகின்றார்.

திருநாவுக்கரசர் திருப்பாட்டில், 'ஆலவாயில் அப்பனே அருள் செய்யாயே' என்றும். 'தென்கூடல் திருவாலவாய்' என்றும், வரும் தொடர்களைக் காணலாம். மாணிக்கவாசகர் திருவாக்கில் 'கூடல்' 'மதுரை' என்ற சொற்களே பெரும்பங்கு பெறுகின்றன.

'ஆலவாய்' 'ஆலவாயில்' என்ற இருபெயர்களுமே இவ் விரு நாயன்மார்கள் காலத்து வழங்கினவோ என்று எண்ண இடந்தருகின்றன இவர்களது திருவாக்குகள்.

திருமுகப்பாசுரம் :

பதினோராம் திருமுறைத் திருமுகப்பாசுரத்து வரும் 'ஆலவாயின் மன்னிய சிவன்யான்' என்ற தொடரை இரு வகையினும் பிரித்துப் பொருள் காணலாம். அவ்வாறு அத் தொடர் அமைந்திருத்தலை நாம் அறிய இயலுகின்றது.

"ஆல மரத்தின் கீழ்":

இனி, 'ஆலவாய்' என்பது 'ஆலமரத்தின் கீழ்' என்ற பொருள் படும் என்றும், 'ஆலவாயில் அப்பனே' என்ற அப்பரடிகளின் தொடர் ஆலமரத்தின் கீழ் எழுந்தருளியுள்ள இறைவனே' என்ற பொருள் உடையது என்றும் கருதுவர் பலர். ஆலமரங்கள் நிறைந்து தோன்றியமையின், 'ஆலவாய்' (கடம்ப மரங்கள் - கடம்பவனம்) என மதுரை அழைக்கப் பெற்றதென்றும் கருதலாம்; மருத மரங்கள் செறிந்திருந்தமை யின் 'மருதந்துறை' என அழைக்கப்பெற்றுப் பின்னர் அதுவே 'மருதை' மதுரை என்றாயிற்றாகலாம் என்ற கருத்தும் இங்குச் சிந்தித்தற்குரியது.

'ஆலவாயில் அப்பர் விளக்கம்:

'ஆலவாயில்' என்றே வழங்குவது தம்திருவுள்ளம் ஆதலை அப்பரடிகள் தம் அடைவுத் திருத்தாண்டகத்தில்,

" கடுவாயர் தமைநீக்கி யென்னை யாட்கொள்
கண்ணுதலோன் நண்ணுமிடம் அண்ணல்வாயில்
நெடுவாயில் நிறைவயல்சூழ் நெய்தல்வாயில்
நிகழ்முல்லை வாயிலொடு ஞாழல்வாயில்
மடுவார் தென் மதுரைநகர் ஆலவாயில்
மறிகடல்சூழ் புனவாயில் மாட நீடு
குடவாயில் குணவாயில் ஆனவெல்லாம்
புகுவாரைக் கொடுவினைகள் கூடாவன்றே "

எனப் பல 'வாயில்' களோடு இணைத்துக் கூறுதலால் அறியலாம். இங்கு 'மதுரை நகர் ஆலவாயில்' என்று அடைமொழி புணர்த்து அடிகள் உரைப்பதால் அது மதுரையாகிய ஆலவாயையே குறிப்பதாதல் தெளிவு. வேறொன்றைக் குறியாது கூடல்மா நகரைக் குறிப்பதற்காகவே அவ்வடைமொழி கொடுக்கப்பட்டதாதல் சிந்திப்பின் விளங்கும். எனவே 'ஆலவாயில்' என்பதனைப் புராண விளக்கம் வேருகக் கூறினும், அப்பரடிகள் காலத்தே அஃது அங்ஙனம் வழங்காமை தெளிவாகும். அன்றியும் இவ்வடைவு திருத்தாண்டகத்தில் கூறப்பட்டுள்ள ஏனைய 'வாயில்' களையும் இணைத்து நோக்க, இஃது இயற்கையமைப்பின் இயன்ற பெயராதலும் விளங்கும்.

நெய்தல் வாயில், ஞாழல்வாயில், குடவாயில் முல்லைவாயில், குணவாயில், நெடுவாயில், அண்ணல்வாயில் என்னும் அனைத்திலும் இதனைக்காணலாம். இவ்வாறே 'ஆலவாயில்' என்பதும் ஆலமரச் செறிவை அடிப்படையாகக் கொண்டதாகலாம் என்பது தவருகாது அன்ருே? (இதனை 'வேதியா வேதகீதா' (599) என்ற திருப்பாடற்கமைந்த தருமையாதீன உரைப்பகுதி இனிது எடுத்து விளக்கியிருத்தல் இவ்விடத்து அறிந்து மகிழத்தக்கது ஆகும்.) ஆதலின், 'ஆலவாய், ஆலவாயில்' என்னும் இரண்டு பெயர் வழக்குகளும் பண்டு முதல் உண்மையும் அவை புராண காலத்தின் விளக்கத்திற்கு முற்பட்டுத் தோன்றிய பொருட்சிறப்புடையன என்பதும் தெளிவாகும்.

திருக்களிற்றுப்படியாரும் நாயன்மார்களும்

சிவநெறிச்செல்வர்

திரு. K. M. வேங்கடராமையா M. A.,

தோற்றுவாய்

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு. அவற்றுள் திருக்களிற்றுப்படியார் என்பதொன்று. இது திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் என்பவரால் அருளிச்செய்யப்பட்டது. இந்நூல் நூறு வெண்பாக்களைக் கொண்டது. இந்நூலை இயற்றி, இஃது இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்று அறிந்துகொள்ளும் பொருட்டுச் சிதம்பரத்தில் கனகசபையில் - ஸ்ரீ நடராசப் பெருமான் திருமுன்னிலையில்-திருக்களிற்றுப்படியில் - இந்நூலாசிரியர் வைத்தார். அந்தப்படியின் மருங்கிலுள்ள களிற்றுக்கை நிமிர்ந்து அந்நூலைத் தில்லைக்கூத்தன் திருமுன் வைத்தது. இதனால் இந்நூலுக்குத் திருக்களிற்றுப்படியார் எனப் பெயர் வழங்கலாயிற்று. ஸ்ரீ வெள்ளியம்பலவாண முனிவர் தாமருளிச்செய்த முதுமொழிமேல்வைப்பு என்ற நூலில் 'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்'* என்ற திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக இந்நூலையே கூறியுள்ளார். அப்பாடல் பின்வருமாறு :-

> "பண்டு களிற்றுப் படிமருங்கு வைத்தசெழுந்
> தண்டமிழை யம்பலவர் தாமகிழ்ந்து - கொண்டமையால்
> எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு."

சிவகரணம்

ஞானசம்பந்தராதிய சைவசமய குரவர்கள் பாடிய பாடல்கள் உயிருள்ள பாடல்கள். அன்னோர் நம்மனோர்போலப்

***இக்குறளுக்கு மெய்கண்ட தேவரும் எடுத்துக்காட்டாகக் கூறப்பட்டுள்ளார் என்பதையும் கண்டு அறியலாம் - முதுமொழி மேல்வைப்பு, செய்யுள் 74.**

புறத்தே காணப்படினும், அவர்களுடைய கரணங்கள் பசு கரணங்களாக இன்றிச் சிவகரணங்களாகவே மிளிரும். அவர்கள் கூறுவன இறைவனுடைய வாக்காகவே அமையும். ஞானசம்பந்தப் பெருமானும் இலம்பையங் கோட்டூர்ப் பதிகத்தில், தான் உரைக்கும் சொற்களெல்லாம் இறைவனுடைய அருள் வாக்கே ஆகுமென்று 'எனதுரை தனதுரையாக' என்றவிடத்துக் குறித்துள்ளார். இத்தகைய சிவகரணம் உடைமையால்தான் சம்பந்தர் பாலைநிலம் நெய்தல் நிலம் ஆகுமாறு பாடினர்; பாம்புகடித்து இறந்தவனை உயிர்பெற்று எழுமாறு பாடினர். திருநாவுக்கரசரும் அங்ஙனமே அப்பூதி அடிகளாரது மகனை உயிர்பெற்றெழுமாறு பாடினர். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அவிநாசியில் முதலையுண்ட பாலனை வரச்செய்தார். இவற்றைக் கூறும் திருக்களிற்றுப்படியார் பின்வருமாறு :-

"பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனை யன்றேவிக் கராங்கொண்ட - பாலன்
மரணம் தவிர்த்ததும் மற்றவர்க்கு நந்தம்
கரணம்போல் அல்லாமை காண்,"

வல்வினை

சிவதன்மத்தை மெல்வினை என்றும் வல்வினை என்றும் இரண்டாகப் பிரித்துக் கூறுவர். வல்வினை என்பது உலகத்தாராலே செய்தற்கு அரியது.

வல்வினைக்கு உதாரணங்கள்

1. சிறுத்தொண்டர் பைரவராக வந்த பரமனுக்குத் தன்மகனைக் கறியமுதாக்கிப் படைத்தது.

2. சண்டீச நாயனர், இறைவனுக்கென்று வைக்கப்பட்டிருந்த பாற்குடங்களை இடறிய தன்னுடைய தாதையின் தாளைத் தடித்தது.

3. கமரிலே (நிலவெடிப்பிலே) சிந்திய செந்நெல், அரிசி செங்கீரை, மாவடு ஆகியவற்றைத் திருவமுது செய்ய வேண்டுமென்று நிவேதித்துத் தன்னுடைய கழுத்தை அறுத்துக் கொண்டது அரிவாட் டாயருடைய செயல்.

இவற்றைத் திருக்களிற்றுப்படியாரில் மூன்று வெண்பாக்கள் தெரிவிக்கின்றன :-

" வரங்கள் தருஞ்செய்ய வயிரவர்க்குத் தங்கள்
கரங்களினுல் அன்றுகறி யாக்க — இரங்காதே
கொல்வினையே செய்யும் கொடுவினையே யானவற்றை
வல்வினையே யென்றதுநாம் மற்று."

" பாதகம் என்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டும் — சேதிப்பக்
கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
சண்டீசர் தஞ்செயலால் தான்."

" செய்யில் உகுத்த திருப்படி மாற்றதனை
ஐய இதுவமுது செய்கென்று — பையவிருந்து
ஊட்டி யறுத்தவர்க்கே பூட்டி யறுத்தவரை
நாட்டியுரை செய்வதென்னே நாம்."

செயற்கரிய செயல்

நாயன்மார்கள் பலர் சாதாரண மக்களால் செய்ய முடியாத-செயற்கரிய-செயல்களைச் செய்திருக்கிறுர்கள். காஞ்சியில் திருக்குறிப்புத்தொண்டர் கந்தைகளை அடித்துத் துவைக்கும் கற்பாறையின் மேல் தம்முடைய தலையையே மோதிக்கொண்டார். ஏயர்கோன் கலிக்காமர் சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் காணமாட்டேன் என மறுத்து உடைவாளால் தம் வயிற்றைப் பிளந்துகொண்டார் மூர்த்தியார் சந்தனமரைக்கும் கல்லில், சந்தனக் கட்டைகள் கிடைக்காமையினுலே, தன்னுடைய கையையே சந்தனக்கட்டையாகக் கொண்டு தேய்த்தார். மூர்க்கநாயனுர் சூதாடிப் பொருளீட்டுபவர்; வஞ்சகச் சொற்களால் மறுத்துப் பேசுபவர்களைத் தம் உடைவாளினுல் குத்திக்கொல்வார். இவர்கள் இத்தொழில்களைச் செய்யும்போதே சிவபெருமானை உள்ளும் புறமும் ஒருவழிப்பட்ட கருத்துடன் சிந்தித்து வாழ்ந்தமையால் இவர்களுடைய செயல்கள் சிவஞானிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. பின்வரும் வெண்பா இவ்வடியார்களைப் பற்றியதாக இருத்தல் காணலாம்:-

" கல்லிற் கமரிற் கதிர்வாளிற் சாணையினில்
வல்லுப் பலகையிலில் வாதனையைச் — சொல்லும்
அகமார்க்கத் தாலவர்கள் மாற்றினர்காண் ஐயா !
சகமார்க்கத் தாலன்றே தான்."

அன்புநெறி

சிவபெருமானின் திருவடிகளை அன்புநெறியாலும் அடையலாம். மாணிக்கவாசகப் பெருமான் கண்ணப்ப நாயனுரைப்

பற்றிக் கூறும்போது 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை' எனக் கூறுகின்றார். இக்கண்ணப்பருடைய அன்புநெறியைத் திருக்களிற்றுப்படியார் பின்வருமாறு கூறும் :-

"கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை என்றமையால்
கண்ணப்பன் ஒப்பதோர் அன்பதனைக் — கண்ணப்பர்
தாமறிநல் காளத்தி யாரறிதல் அல்லது மற்(று)
ஆரறியும் அன்பன் றது."

திருஞானசம்பந்தப்பிள்ளையார் உமையம்மையாரால் ஞானப் பால் ஊட்டப்பெற்றார் என்பதைக் கேட்டமாத்திரத்தில் மங்கையர்க்கரசியார்க்குப் பால் சுரந்தது. இதுவும் அடியார்களிடத்துக் காட்டும்படியான அன்புக்கு எடுத்துக்காட்டு. இச்செய்தியை நால்வர் நான்மணி மாலையில்,

"இலைபடர்ந்த பொய்கை இடத்தழுதல் கண்டு
முலைசுரந்த அன்னையோ முன்வின் — நிலைவிளம்பக்
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தர்
இங்குயர்ந்தாள்ஆர்சொல் எனக்கு."

என்ற பாடலில் சிவப்பிரகாச சுவாமிகள் குறித்திருக்கிறார். இச் செய்தியை முதுமொழிமேல் வைப்பில் வெள்ளியம்பலவாண முனிவரும் குறிப்பாகக் குறித்துள்ளார் (செய்யுள் (125). மங்கையர்க்கரசியாரது அன்பு நிகழ்ச்சியைத் திருக்களிற்றுப்படியார் பின்வருமாறு புகல்கின்றது :-

"சுரந்த திருமுலைக்கே துய்யசிவ ஞானஞ்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச் — சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையாள் அன்பிருந்த வாறு"

ஞானிகளின் அற்புதங்கள்

சிவபெருமான் ஒருவரே ஒன்றை ஆக்குதல் அழித்தல் முதலிய செயல்களைச் செய்யவல்லவர். ஆனால் அவ்விறைவனைப் போலவே ஒன்றை ஆக்குதலும் அருளலும் அழித்தலும் போன்ற செயல்களை ஞானசம்பந்தராகிய சைவசமய குரவர்கள் செய்திருக்கிறார்கள். அவர்கள் செய்த அற்புதங்களெல்லாம் சிவபெருமான் அருளாலே செய்யப்பட்டவையேயாம். அத்தகைய சிவ ஞானிகள் சிவன் அருளால் செய்த அற்புதங்களைத் திருக் களிற்றுப்படியாரில் நான்குதிருவெண்பாக்கள் தெரிவிக்கின்றன.

திருஞானசம்பந்தர் அற்புதங்கள் பதிகம்பாடித் திருக்கொள்ளம் பூதூரில் ஓடம் செலுத்தி ஆற்றைக் கடந்தமையும், திருப்பட்டீச் சுரத்தில் முத்துச் சிவிகை பெற்றமையும், திருவாவடுதுறையில் உலவாக்கிழி பெற்றமையும், திருமறைக்காட்டில் திருக்கதவம் அடைக்கப் பாடியமையும் திருஓத்தூரில் ஆண்பனை பெண்பனை யாகுமாறு பாடியமையும், திருக்கோலக்காவிலே பொற்றாளம் பெற்றமையும், திருநனிபள்ளியில் பாலைநிலத்தை நெய்தல் நிலமாகப் பாடியமையும், மதுரையில் ஏடு எதிரேறுமாறு செய்த மையும், கூன்பாண்டியனின் வெப்புநோய் தீர்த்தமையும், மயிலாப்பூரில் என்பைப் பெண்ணுருவாக் கண்டதும் சம்பந்தர் ஆற்றிய அற்புதங்களாகும். இவற்றைக் கூறும் திருக்களிற்றுப் படியார் பின்வருமாறு :-

''ஓடம் சிவிகை உலவாக் கிழிஅடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநெய்தல் — ஏடெதிர்வெப்(பு)
என்புக் குயிர்கொடுத்தல் ஈங்கிவைதாம் ஓங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்.''

திருநாவுக்கரசர் அற்புதங்கள் :- திருநாவுக்கரசர் நீற்றறை யில் ஊனமிலராகித் திகழ்ந்தார்; சமணர்கள் விடுத்த யானையி னின்றும் தப்பினார்: நஞ்சுகலந்த பாற்சோற்றை அமுதாக அயின்றார்; கல்லையே தெப்பமாகக்கொண்டு கடலினின்றும் கரையேறினார்: திருமறைக்காட்டிலே திருக்கதவத்தைப் பாடித் திறந்தார். இவ்வற்புதங்களைக் கூறும் திருக்களிற்றுப்படியார் திருப்பாடல் வருமாறு :-

'' கொல்கரியின் நீற்றறையின் நஞ்சில் கொலைதவிர்த்தல்
கல்லே மிதப்பாய்க் கடல்நீந்தல் — நல்ல
மருவார் மறைக்காட்டில் வாசல் திறப்பித்தல்
திருவாமூ ராளி செயல்.''

சுந்தரர் அற்புதங்கள் :- சுந்தரர் ஆற்றிய அற்புதங்கள் பல. ஒருவன் மோகத்தை ஒழித்தால் அவனுக்கு வீடுபேறு கிட்டும். ஆனால்சுந்தரர் சிவபெருமானையே பரவையாரிடத்தில் ஒருமுறை க்கு இருமுறை திருவாரூரில் தூதராக அனுப்பினார் என்றால் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அற்புதச் செயல்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இதனைப் பின்வரும் திருக்களிற்றுப் படியாரிலிருந்து அறியலாம்.

'' மோகம் அறுத்திடினும் முத்தி கொடுப்பதெனை
ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத் — தோகையர்பால்
தூதாகப் போகவிடும் வன்றொண்டன் தொண்டுகளை
ஏதாகச் சொல்வே னியான்.''

மாணிக்கவாசகர் அற்புதங்கள் :- மாணிக்கவாசகர் பொருட்டு இறைவன் எத்தனையோ திருவிளையாடல்களைச் செய்திருக்கிறார். அவர் பொருட்டு நரியைக் குதிரைப் பரியாக்கிக் குதிரைச் சேவகனாகவும் இறைவன் எழுந்தருளினார். அத்தகைய பெருமைவாய்ந்த மாணிக்க வாசகப்பெருமான் திருவாயாலே சிவபெருமானைப் புகழ்ந்து பாடியதே திருவாசகம். திருவாசகத்தை ஓதினால் கருவாசனையே இராது. மாணிக்கவாசகருடைய பெருமையைப் பின்வரும் திருக்களிற்றுப்படியார் கூறும் :-

'' பாய் பரியோன் நந்தப் பரமானந் தப்பயனைத்
தூயதிரு வாய்மலரால் சொற்செய்து — மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தேன்.''

அடியார்களுடைய அன்புக்கு இறைவன் இரங்குவான் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் தில்லையில் தேரோடத் திருப்பல்லாண்டு பாடிய சேந்தனார் வரலாற்றைத் திருக்களிற்றுப்படியார் 53 ஆவது செய்யுள் செப்புகிறது.

முடிப்புரை

இதுகாறுங் கூறியவாற்றால் திருக்களிற்றுப் படியார் என்னும் ஞானசாத்திரத்தில், சாத்திரக் கருத்துக்களுக்குச் சைவ சமய நாயன்மார்கள் பலருடைய வரலாற்றுக் குறிப்புக்கள் எடுத்துக்காட்டுகளாக அமைந்திருக்குமாற்றைக் கண்டு மகிழலாம்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur.

திருக்கடவூர் தேவஸ்தானத்திற்கு வரும் பேறு பெற்றோம். இறைவழிபாடு செய்து அபிராமி அம்மன் அருளுக்கு பிரார்த்திக்கும் பேற்றினையும் பெற்றோம். கோயில் மிகவும் தூய்மையாக வைக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

தமிழகத்தின் சிறப்புமிக்க கோயில்களுள் ஒன்று திருக்கடவூர் திருக்கோயில்.

இறை நெறி தழைக்க !

8—1—66]

(Sd.) ம. பொ. சிவஞானம்
(Sd.) நா. மகாலிங்கம்
(Sd.) Avadiyappan
(Sd.) மு. சிதம்பரம்
(Sd.) K. C. நாகலிங்கம்.

முத்து அடிவருடும் முதல்வன்

வித்துவான். திருமதி. ப. நிலா

உலகின் விந்தையைப் பாருங்கள். தோன்றிய பொருளால் தோற்றுவித்த இடம் பெருமைபெறுகிறது. சில சமயங்களில் தோற்றுவித்த இடத்தினுல் பொருள் புகழப்படுகிறது. இன்னும் சில நேரம் பொருள் பேறு பெரும்போது அது பிறந்த இடம் மறந்தே விடுகிறது.

அறிவுசால் மகனைப் பார்க்கும்போது இவன் தந்தை என் னேற்ருனே என்று எண்ணவேண்டும். பொருளினுல் அது பிறந்த இடமும் புகழப்பெறுகிறது இங்கே.

ஒளிபொருந்திய முத்தினைக் கண்ணுல் காணும்போது எத்துணைபேர் அழுக்கடைந்த சிப்பியைச் சிந்தனை செய்வர்? சிப்பிக்குச் சிந்தனையில் ஏது இடம்! அது மறைந்து ஒதுங்கி அருவருத்திருந்தால் முத்தெங்கே! ஒளியெங்கே!

திருவளர் தாமரை குளத்தின் சேற்று நிலையில்தானே உதயங் கொண்டது. தாமரையைப்பற்றிக் கவிபாடத் துணியும் உள்ளம் சேற்றில் சிந்தனை செலுத்தத் தயங்குவதேன். சிப்பி, நண்டு, கதலி, தேள் போல, தான் பெற்ற பொருளாலேயே நாசமடையா விட்டாலும் - செழுமை தந்த சேறு மனிதர் மனத்தில் சிறப்பிடம் பெறவில்லை.

சேறு மணக்கும் கழனிகள் – நாட்டின் வளத்திற்குக் காரண மல்லவா!

சேறுபோல, சிப்பிபோல தன்னைத்தானே அழித்துக் கொண்டு அன்பு என்ற போர்வையில் அளிந்து நிற்போமானுல் நம்முள்ளே தோன்றும் புத்துணர்ச்சியை உலகம்போற்றும். அந்தப் புதிய விழிப்பு தாழ்ந்த இடத்தில் தோன்றக்கூடாது என்று சட்டம் இல்லை. கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற் பால் ஒருவனும் அவன்கட்படுமே - என்ற எண்ணம் சங்க காலத்திலேயே எழுந்தது தானே! இந்தச் சிந்தனை ஓட்டம் குழந்தைப் பருவத்திலேயே எழவேண்டும் என்ற காரணத் தாலோ என்னவோ குழந்தைக் கவிஞரே குழந்தைகளிடத்தில் இதனைத் தெரிவிக்கிருர்.

" மனிதர் வெறுக்கும் சேற்றிலே
மலர்ந்து நிற்கும் தாமரை
புனித மான கடவுளைப்
பூசை செய்ய உதவுதே!"

இன்னென்று - பொருள் தானும் புகழ்பெறுவதோடு பிறந்த இடத்தையும் விளங்கச் செய்வது. இதற்குக் காட்டு - செஞ்சடை வானவன் பெற்ற செல்வக்குமரன், கந்தன் பிறக்கக் கண்ணுத லோன் புகழ் பின்னும் விரிந்தது. கார்த்திகேயனின் கீர்த்தியோ வார்த்தைகளுள் அடங்காது. பணிவும் பண்பும் செல்வந்தர் களிடத்திலே சேரும்போது அவைகள் பின்னுமொரு செல்வ மென்றே தகைமைபெறும். உயர்ந்த உள்ளம் படைத்தவர்கள் பேதமின்றித் தாழ்ந்த பொருள்களைக் கருணைக்கண்ணுல் நோக்கி அருள்பாலித்தல் இயற்கை. இதற்குச் சற்றும் முரணில்லாமல் அயில்வேல் பிடித்த அழகன் ஒருகோடி முத்தம் தெள்ளித் தெழிக்கும் செந்திலங் கடற்கரையில் முத்துக்கள் திருவடிகளைத் தொட்டுத் தடவும் வண்ணம் கோயில் கொண்டுள்ளான். இமயப் பொருப்பகம் சேர்ந்த பொல்லாக் கருங்காக்கையும் பொன்னிறம் பெறுவதுபோல் தரளங்கள் மயிலேறிய மாணிக்கத் தின் திருவடிகளைத் தீண்டி மாண்புறுகின்றன.

முத்தஞ் சொரியும் கடலலைவாய் மேவிய முருகப்பிரானிடம் முத்துக்கள் கொண்ட தோழமையைப் பாட்டில் வல்ல பகழிக் கூத்தர் பகரும் பான்மையைப் பார்க்கலாமே.

முத்தப் பருவத்தில் இடங்கொண்ட முத்தான பாடல் இது.

" கத்தும் தரங்கம் எடுத்தெறியக்
கடுஞ்சூலுளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்திற்
கான்ற மணிக்கு விலையுண்டு "

பண்டைய தமிழகம் முத்துவாணிபத்தில் நிகரற்று விளங்கியது. பாண்டிநாட்டு விலைமதிக்க வொண்ணு முத்துக்கள் உரோமாபுரி நங்கையர் கழுத்துக்களை அழகு செய்தனவாம். மலை நாடு - வேழத்திற்கும் பாண்டி நாடு முத்திற்கும், - தொண்டை நாடு - சான்ருேர்களுக்கும், சோழ நாடு - சோற்றுவளத்திற்கும் என தனிப்பெருமை பெற்றுத் திகழ்ந்த பொற்காலம் அது.

வருந்திக் குளித்தெடுக்கும் வருத்தத்தைக்கூட மக்கட்குக்குத் தராமல் செந்திலில் கத்தும் அலைகள் கரையில் எறிந்த சிப்பிகள்

சூலுளைந்து முத்துக்களைப் பெற்றுக் குவிக்குமாம். அப்படி ஈன்ற முத்துக்களைத் தரம்பிரித்து முத்துவாணிகர் மதிப்பிட வகை உண்டு. மேலே செல்லுங்கள்.

தத்தும் கரட விகட தட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளந் தனக்கு விலையுண்டு

முத்துக்கள் தோன்றுமிடங்கள் பதினாறென்றும், முப்பத்திரண்டென்றும் கூறுவர். அவற்றுள் மூங்கில், கரும்பு, யானைத் தந்தங்களும் அடங்கும். பெருமை பொருந்திய யானையின் விசாலமான பிறையென வளைந்த கோட்டிலே தோன்றும் முத்தையும் விலையிடலாம்.

தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்
கொத்தும் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர் முத்தினுக்கு விலையுண்டு.

' இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும் '

என்பார் வள்ளுவர். அகழ்வாரைத் தாங்கி - மகிழ்வோடு நலம் தருகிற நிலம் என்ற நல்லவள் தன் மணி வயிற்றில் ரத்தினங்களை அடக்கி வைத்திருக்கிறாளாம்.

குடகாற் றெறிந்த குப்பை வடபாற்
செம்பொன் மலையிற் சிறப்பத் தோன்றும்
தண்பணை தழீஇய தளரா இருக்கை
- பெரும்பாண் - 240-242

நாணுடைய நல்லார் போல், கல்விசேர் மாந்தர் போல் இறைஞ்சி நிற்கின்ற செஞ்சாலிக் கொத்தில் அடங்கிய முத்துக்களும் மதிப்பீட்டைப் பெறும். பாடலை இன்னும் தொடருவோம்.

கொண்டல் தருநித்திலந் தனக்குக்
கூறுந் தரமுண்டு

விசும்பிலிருந்து துளிவிழவில்லையானால் பசும்புல் தோன்றுதல் எங்கே? நீரின் றமையா உலகம் போல என்பார் நற்றிணை ஆசிரியர். மாமழையைப் போற்றும் இளங்கோவடிகள் உள்ளம் நாமுணராதொன்றா !

' முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் '

என்று வேண்டுவது மழைத் தொழிலின் மேன்மையைப் பறைசாற்றுவதில்லையா. துப்பார்க்கு வேண்டுவனவற்றை உண்டாக்கித் தானே துய்ப்பாக ஆவதும் மழையின் மாட்சிமை ஆகும். வானம் வறக்குமேல் வானோர்க்கும் இங்கே சிறப்பொடு பூசனை செல்லாது என்று தெய்வப்புலவர் தெரிவிப்பாரே. கொண்டல் கொட்டும் நித்திலங்களும் கூறும் தரம்பெற்றவையே! பின் ஆசிரியர் கூறும் புதுமைச் செய்திதான் என்ன...

நின் கனிவாய் முத்தந்தனக்கு விலையுண்டோ
முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியும் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே.

வெற்பரையன் மகளுக்குப் பிள்ளையாய் வந்துதித்த வேலவனே! நான் எண்ணி வந்த இவ்வளவு முத்துக்களும் விலைமதிப்பிட இடம் தருபவைகளே! உன் கனிவாய் தருவதும் ஒரு முத்தந் தான். அதற்கு என்ன விலை கூறுவது? அதற்கு விலையும் உண்டோ - அது உரையிடும்(கல்லில்) தரத்ததோ - உரையிடும் (சொல்லில்) தரத்ததோ?

காதலால் கடலரசி கரையிலே முத்துக்களைக் குவிக்கிறாள். இந்தக் கோடானுகோடி முத்தங்கள் உன்வாய் முத்தத்திற் கிணையாமோ! மலைக்குந்நிகர் ஒப்பன வன்திரைகள் வலித் தெற்றி முழங்கி வலம்புரிகொண் டலைக்குங் கடலில் வளர்சங்கம் அங்காந்து முத்தஞ் சொரியும் இயற்கைச் சூழலில் அழகன் அமர்ந்தருளும் கோலத்தினையும், வாய் முத்தம் பெற விழைந்த பாவலரின் வண்முத்தென்ற தமிழ்ப் பாடலையும் எண்ணி இன்புறலாம் அல்லவா!

பாடல் முழுவதையும் கீழே காணலாம்.

கத்தும் தரங்க மெடுத் தெறியக்
கடுஞ்சூலுளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்திற்
கான்ற மணிக்கு விலையுண்டு
தத்துங் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளந்தனக்கு விலையுண்டு
தழைத்துக் கழுத்து வளைந்த மணிக்

கொத்தும் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர் முத்தினுக்கு விலையுண்டு
கொண்டல் தருநித் திலந்தனக்குக்
கூறுந் தரமுண்டு உன்கனிவாய்
முத்தந் தனக்கு விலையுண்டோ
முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswami Devasthanam, Tirucadaiyur.

I had the good fortune to have darshan at this temple today. with my family - One is struck by the scrupulously clean way in which the temple and surroundings are kept. The temple officials and archakas are very helpfull, and instructive. The Dharmapuram Adhinam is well-known for the great care and neatness with which its temples are maintained.

We were very much impressed with the temple, and one gets a divine feeling - We had to leave the temple with the regret that we could not spend some days more here.

The Adhinam, the staff, and all concerned deserve praise for the excellent manner in which the temple is maintained.

(Sd.) S. Vaidhyanathan,
30—1—66 Special Dy. Collector.
Revenue Court; Kumbakonam

கல்லாடம் - திருக்கோவையார்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,
வித்துவான். திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

(மலர் 25, இதழ் 2, பக்கம் 35ன் தொடர்ச்சி)

பதின்மூன்றும் நூற்றுண்டிடை வாழ்ந்த அக்காலச் சங்கப் புலவருள் துங்கனுய் விளங்கிய கல்லாடரெனும் புலவர் கல்லாட மெனும் நூலை, களவு கற்பு ஒழுக்கங்கட்கேற்ப துறையடைவு படுத்திக் கூறினரல்லர். திருக்கோவையாரிலுள்ள நூறு துறைப் பாட்டுக்களை விளக்குவார் போன்று கூறப்பட்டுள்ளது. கோவை முதனூலாகவும் இதனை வழி நூலாகவும் கொள்ளலாமன்ரே ? களவு கற்பு ஒழுக்கங்கட்குரிய கிளவியும் துறையும் முன்னும் பின்னும் இடையும் ஆகிய இடங்களிற் காணைக்கிடக்கின்றன· இதன்பின்னர்த் தோன்றியுள்ள புலவர்களாதல், களவு வரைவு கற்பு ஒழுக்கங்கட்கேற்ப அமைத்தருளிய அதிகாரவடைவோடு கூடிய இருபத்தைந்து கிளவிகளுட்பட்ட துறைப்பாட்டுக்களைக் (கோவையாரிற் கண்டவற்றினை) கல்லாடமெனுமகவற்பாக்களைத் துறையடைவுபடுத்திக் கண்டிருக்கலாம் என்ரே செய்திலர். இவையொருபுறங்கிடக்க. கல்லாடத்தில் 98, 99, 100 என்னும் எண்ணுள்ள இறுதியகவற்பாக்கள், நாடகவியல் மணியியல்' இசையியல் தெரிப்பதாகவுள்ளன. இவைகட்குரிய கிளவிகளும் துறைகளும் (கோவைப்பாடல்கள்) கற்பிற்கும் களவிற்கு முள்ளவையாக வமைந்தனவற்றை மாறி யுரை யுரைக்கப்பெற் றமை யாயவேண்டியதொன்றும். 98, 100வது பாடல்களாகிய கல்லாடத்திற்குக் கோவையாரினின்றும் 282, 281வது செய்யுட் கள் துறைப்பாட்டாகக் காட்டப்பட்டுள்ளன. இவைமெலிவுகண்டு செவிலி கூறலும் தூதுகண்டழுங்கலும் ஆகிய துறைகளாம். இவ் விரண்டு துறைகளும் களவிற்குரியன. 282 வது செய்யுள் களவியலாயின் 281வது செய்யுள் எங்ஙனம் கற்பாகும். 99ம் செய்யுட்குரியது, 349ம் பாடல். தேர்வரவு கூறல் எனுந்துறை யாம். தேர்வரவு கூறல் எனும் துறை களவிற்குமுரித்து. இப் பாடல் கற்பிற்குரித்தெனல் திருக்கோவையாரிற் கண்டதாகும் ஆகவே இனியாதல் இக் கல்லாடநூலைத் திருக்கோவையார் செய்யுட்டுறைகட்கேற்ப அடைவுபடுத்தி மயிலேறும் பெருமாள்

பிள்ளையவர்களுரையினையும் சேர்த்துக் கோவைப் படுத்திக் கல்லாடக்கோவையெனச் செய்தல் சாலச் சிறப்புடைத்தாகும்.

திருக்கோவையாரினின்றும் எடுத்துக்கொண்ட நூற்றிரண்டு செய்யுட்கு நூறுதுறையாகக் கொண்டுள்ளார், பிரிவருமைகூறி வரைவு கடாதலும் தினைமுதிர்வுரைத்து வரைவு கடாதலும், மயிலொடு கூறிவரைதலும், (144, 138, 145வது பாடல்கள்) இவை களவு என்னுங் கைகோளுக்குரியவை. இவையடங்கிய பாட்டு,

" அண்டம் ஈன்றளித்த கன்னி முனிவாகத்
திருநுதன் முளைத்த கனறெறு நோக்கினில்
ஆயிர மணிக்கரத் தமைத்தவான் படையுடன்
சயம்பெறு விரனைத் தந்தவன் றன்னால்
உள்ளத் தருளும் தெய்வமும் விடுத்த
இருண்மனத் தக்கன் பெருமக முண்ணப்
புக்க தேவினர்தம் பொருகடற் படையினை
ஆரிய வூமன் கனவென வாக்கிய
கூடற் பெருமான் பொதியப் பொருப்பகத்து
அருவியஞ் சாரல் "

இதன் உரை வருமாறு (மயிலேறும் பெருமாள்பிள்ளையுரை) பல்லாயிரகோடியண்டத்தையும் படைத்துக்காத்த உமைக்குக் கோபமுண்டாகையால் அழகிய நுதலில் தோன்றிய கனலாகச் சுடாநின்ற கண்ணினால் அளவிறந்த பெரிய படை அமைத்த அழகிய கையுடன் வெற்றிபெறும் வீரபத்திரனைப் படைத்து அவனால், உள்ளத்தின்கட் பிறக்கும் இரக்கமும் தெய்வமென்னு நினைவும் விடுத்தற்குக் காரணமான அஞ்ஞானத்தையுடைத்தாகிய மனத்தையுடைய தக்கன் உண்டாக்கிய பெரிய மகத்து அவிர்ப்பாகத்தையுண்ணப் புகுந்த பிரமா முதலான கடவுளர் பொராநின்ற படைக் கடலினை ஊமன்கண்ட அரிய கனவு போல வெளிப்படாதாக்கிய மதுரைப்பெருமானது அருவியையுடைய பொதியவரையின் பக்கத்து என்பதாம். இவ்வகவற் பாவிடை, தக்கன் மகம் அழித்தமையும் வீரபத்திரன் தோற்ற முடைமையும், குறவர் தம் மகள் நுதல் கண் முதலிய அவயவச் சிறப்பினழகும் பிறவுங் குறிக்கப்பெற்றுள்ளன. 21 ஆம் அகவலுள்

" நாடக விதியோ டாடிய பெருமான்
மதுரை மாநகர்ச் செழியனாகி " எனவும்

"பன்மலர்ச் சோலை விம்மிய பெருமலர்
இமையோர் புரத்தை நிறைமணங் காட்டும்
கூடலம் பதியகம் விடுபெற விருந்தோன்."

"கூடல் வீற்றிருந்த நாடகக் கடவுள்"

"கூடலம் பதியுறை குணப்பெருங் கடவுள்"

"மாதவர் வழுத்துங் கூடற் கிறைவன்"

"தேவ நாயகன் கூடல்வா ழிறைவன்"

"கூடலம் பதியகம் விடுபெற விருந்தோய்"

"காமரு கூடற் கிறைவன் கழலிணை"

"வெள்ளியம் பொதுவிற் கள்ளவிழ் குழலொடு
இன்ப நடம்புரியுந் தேவி நாயகன்"

"அமுதயில் வாழ்க்கைத் தேவர்கோ னிழிச்சிய
மதமலை யிருநான்கு பிடர்சுமந் தோங்கிச்
செம்பொன்மணி குயிற்றிய சிகரக் கோயிலுள்
அமையாத் தண்ணளி யுமையுட னிறைந்த
ஆலவா யுறைதரு மூலக் கொழுஞ்சுடர்"

இங்ஙனமாகக் கல்லாடச் செய்யுட்களிடை கூடற் பெரும்பதி யெனப் பல்காற் சுட்டியும், ஆலவாய், மதுரை யெனும் பெயரினை சிறுவரவினவாகச் சுட்டியும் இறைவன் தேவதேவன் எனக் கூறியும் (அட்டதிக் கய விமானம்) எண் யானை தாங்கும் எழின் மண்டபம் இந்திரன் இழிச்சிய தன்மையும் பிறவுங் குறித்துள் ளமை கண்டின்புறற் பாலதாகும்.

"அருந்தமிழ்க்கீரன் பெருந்தமிழ்ப் பனுவல்
வாவியிற்கேட்ட காவியங் களத்தினன்"

(நக்கீரர் கோபப் பிரசாதம்) அடிகள் நக்கீரர் வரலாறும்,

"எட்டெட்டியற்றிய கட்டமர் சடையோன்" எனவரும் அடியால் அறுபாணன் காடலெனுந் தொகையும், தருமிக்குப் பொற்கிழிபெற "கொங்குதேர் வாழ்க்கையெனும்" பாடல்பாடி யளித்தமையும், மதிமலிபுரிசை, எனும் திருமுகப் பாசுரம் சேர மாற் களிப்பான் பாணபத்திரற் கருளிய பரிசும் வரலாற்றுக் கின்றியமையாதனவாம். திருக்கோவையாரில்,

"சிந்தாமணி தெண்கடலமிர்தம்"
"கூம்பலங் கைத்தலத் தன்பர் என்பூடுருகப்"
"பாயும் விடையான்"
"வருங்குன்ற மொன்றுரித் தோன்றில்லையம்பலவன்"

இன்னோரன்ன முதற்குறிப்புச் செய்யுட்டுறைகட்குக் கல்லாடங் கழலுறும் விளக்கந் துளக்கமற நின்று நிலவுகின்றது. இக் கல்லாடனார் செந்தமிழ்க் கந்தப் பெருமானைச் சொந்தக் கடவுளாக வழிபட்டு வாழ்ந்தவராவர். திருக்கோவையாரில் பரங் குன்றம் மிகப் பரமாகப் பன்னப்பெறுகின்றது. அது வருமாறு:- (வெறி விலக்கல்)

"விதியுடை யாருண்க வேரி விலக்கலம் அம்பலத்துப்
பதியுடை யான்பரங் குன்றினிற் பாய்புனல் யாமொழுகக்
கதியுடை யான்கதிர்த் தோள்நிற்க வேறு கருது நின்னின்
மதியுடை யார்தெய்வ மேயில்லை கொல்இனி வையகத்தே."

என்பதாம். இங்ஙனம் பரங்குன்றுதிய கல்லிடையாடுங் கல்லாடராகிய குன்றுதோறாடிய குமரனை வழிபட்டவனருளாலே யவன்ருள் வணங்கி விடுபெறெய்திய விமலனாராவர் கல்லாடர்.

கடவுள் வாழ்த்தில் ஒரு வெண்பாவில் இருபெருங் கடவுளையும் ஒருங்கே வழுத்துகின்றார்:

"செவ்வி திகழ் பொகுட்டுச் செந்தா மரைவதனக்
கொவ்வை யெழிற் செவ்வாய் குறத்தேனை – நவ்வி
விழியானை யைப்புணரும்வேலை வெள்ளம்
பொழியானை யைமனமே போற்று."

என இளையபிள்ளையாரை முன்னும் மூத்த பிள்ளையாரைப் பின்னும் பரவியுள்ளார். "மறுவில் கற்பின் வாணுதல் கணவனாகிய வள்ளிமணாளன் முருகன் செம்மான்மகளைக் களவு கற்பியல் தழுவத் தமிழ்மணம் மணந்தானவன். அதனாலன்றே பின்னர் மணந்த வள்ளியை முன்னும் தெய்வயானையைப் பின்னுங் கூட்டி வேளை யெனவழுத்திய பழுத்த தமிழ்ப் புலமையை என்னென்றியம்புவது.

மூத்த பிள்ளையார் வாழ்த்து அகவற்பாவில் வழிபடுகடவுள் வாழ்த்தாம். சைவசமயிகள் முதன்முதலில் வழிபட்டுச் செயப்படு பொருள் இடையூறின்றி முற்றுறவேண்டுமென வேண்டல் மரபு.

அம்மரபுகொடு வாழ்த்தினர். விநாயகப்பெருமான் வியாபகங் கூறி, தந்தை வலத்தாற் கனி பெற்றமையும் ஆம்பல் முகமுடைமையும் பிறவுஞ் செறித்து இருவினைகட்கிடாக வின்பதுன்பக் கூறுபாடுகளைக்களையும் கடவுளே. "பிறவியி னிறைதரு கலக்கமும், என்மனத் தெழுந்த புன்மொழித் தொகையும் அருள்பொழி கடைக்கண்டாக்கி, தெருளுற ஐய முடிப்பை யின்றெனவே" பிறவித் துயர்களைந்து வீடருளுவாய். இந்நூல் இடையூறின்றி முற்றுதற்கும் அருள்வாய் எனக் கூறிச் செல்கின்றார்.

முருகப்பெருமான் வாழ்த்து

இது, பாய்திரையுடுத்த .... மீளாக்காட்சி தருதியின் றெனவே" 65, அடிகளையுடைய நேரிசையாசிரியப்பாவாகும். இந்நூல் நூறு செய்யுளும் இங்ஙனமே நேரிசையாசிரியப்பாவே யாகும். முருகப் பெருமான் மொய்ம்பு. சூரனைத் தொலைத்த கூர்வேற் கரத்தாற் கூறி அக்கூறுபட்ட சூரனுடல் மயிலும் வாரணமுமாகி ஊர்தியும் கொடியுமாகிய நிலையும் இயம்பி நாரதனார் வேள்வியிற்றோன்றி பாசத்திலேறி அசத்தைப் போக்கிய சத்தனாகிய தன்மையைச் சாற்றி, ஓரெழுத்தின் உண்மைப் பொருளை யுரைத்த நிலையும், பிரமனைச் சிறைப்படுத்திய பெற்றியும் அதன் பின்னர் அத்தனுக்காக அத்தளையகற்றிய வமைவும் விந்தகிரியின் வீறடக்கிய செந்தமிழ் முனிவருக்கு மறைப்பொருளுரைத்து ஆறெழுத்தமைவுடன் அறையுநர் அகத்துள் எழுந்து குகேசனாய் விளங்குவாய் எனத் துதித்துளார். அதனோடு செந்தமிழ் நூல் விரித்த செந்தமிழ்ப் புலவனாமையும் காமமாதி யறுபகையும் அறுத்து கார்மாமிசை காலன் வராமற் கடிந்து நரக சுவர்க்கம் புகாமல் இப்பிறப்பிலேயே பிறவிக்குக் காரணமாயின வொரீ பேரின்ப வீடருளுகவென வேண்டிக் கோடல் மிகமிகப் போற்றும் ஏற்றமுடைத்து. "உள்ளத் திருக்கோவையாமல் உயர் திருவாம் முத்தித் திருவையருளுவது திருக்கோவையார் ஆகும். கூடலுயகளைக் கூடி வழுத்துமவருக்கும் அங்ஙனம் அருளுவன் கூடலுடையான் என்பதுங்கூறி யிம்மட்டு லமைகுதும். கல்லாடமும் அங்ஙனம் தருமெனக் கூறிடும்.

வாழ்க தருமை. வாழ்க குருமணி.

வாழ்க தமிழகம்.

கடிதம் :

திரு. R. கந்தசாமி மூப்பனார் B. A., B. L.,

கும்பகோணம்

இப்பவும் தருமையம்பதியில் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் அமைக்கப்பெற்றுள்ள ஆலயத்தில் ''வன துர்க்கா''வை பிரதிஷ்டை செய்தும் மகாகும்பாபிஷேகம் நடத்த நாள் குறிப்பிட்டும் அடியேனுக்கும், அனுப்பி வைத்த பத்திரிக்கை இன்று தபால் மூலம் கிடைக்கப்பெற்றேன். பெரும் மகிழ்ச்சி அடைந்தேன். அப்பத்திரிக்கையைப் படித்துப் பார்த்தேன். ஸ்ரீ துர்க்கையின் பெருமை, மன்னர்கள் போற்றிவந்தமை, தொல்காப்பிய காலம், சங்க நூல்கள் - பிற்காலத்து நூல்கள் இவற்றில் கண்டுள்ள விஷயங்களைத் தொகுத்து, துர்க்கையைப் பூசிப்பதின் பலனும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. நவ துர்க்கையின் பெயரும், விபரமும் காணப்பட்டிருக்கிறது. அது அறிவிற்கு விருந்தாகவும் பக்திக்குப் பாதை வகுத்ததாகவும் உள்ளது.

நமது சம்பந்தர் - அப்பர் - சுந்தரர் ''மோடி'' என்று கூறிய துர்க்கையைப் பற்றி, தேவாரங்களில் கூறியுள்ள கருத்துக்களைத் தழுவியும் உள்ளதை நோக்க ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பெரிய ஆராய்ச்சி செய்து அதன் பலனை மக்கள் எளிதில் தெரிந்துகொள்ள வழி வகுத்து ஆலயம் ஏற்படுத்தியும் ஸ்தாபனம் செய்தும் கும்பாபிஷேகமும் அவர்களே (அரசினர் முதல் எவரிடமும் பொருள் சகாயம் எதிர்பாராமலும்) இவ்வாலய மட்டுமன்றி தம் ஆளுகைக்குட்பட்ட பல ஆலயங்களையும் புதுப்பித்துத் திருப்பணிகள் செய்து அவைகளுக்கு ஏற்ற வகையில் கும்பாபிஷேகம் செய்து அடியார்களுக்கு நன்னெறி காட்டி வழிபாடு நடத்திவருவது இக்காலத்தில் பெரிய அதிசய அறச்செயல்களில் முதன்மையானது. மடாதிபதிகள் தம் பீடத்தில் அமர்ந்து தம்மைத் தேடிவந்தவர்களுக்கு உபதேசம் செய்து அருள் மொழி புரிந்துவருவதுடன் மேற்கொண்டு அங்ஙனம் தேடிவருவோர்க்கு பிரசாதம், புத்தக வெளியீடு மூலம் அறிவு வழங்குதல் அதற்கு மேல் ஆலயங்களுக்குத் திருப்பணிகளைச் செவ்வனேசெய்து மகா கும்பாபிஷேகம் நடத்தி மக்களுக்கு நற்பலன்கள் கிடைக்கச் செய்வதென்பது அரிய பெரிய காரியம். காலத்திற்கேற்ப எது எச்சமயத்தில் எங்கு செய்யவேண்டுமோ அதனைத் தாமே நேரில் உடனடியாக செய்தல் வருங்காலமறிந்த அறிவுடையோர் செயல்.

நம் நாட்டில் இப்போது ஏற்பட்டுள்ள இன்னல்களை நீக்கவும், துன்பங்களை விலக்கவும், பொருளிலும் அருளிலும் வெற்றி காணவும் கொற்றவையின் அருள் கடாக்ஷம் தேவை. பாண்டவர்களும் தங்கள் துன்பங்கள் நீங்கவும், தங்கள் காரியங்கள் வெற்றி

பெறவும் துர்க்கையைத்தான் பூசித்தார்கள். "ஸ்ரீ துர்க்கையும் அவர்கள் முன் தோன்றி வெற்றி கொடுப்பதாக அனுக்கிரகம் செய்து தன்னைப் பூசிப்பவர்களுக்கு எவ்விதக்கஷ்டமும் நேராது" என்றும், "அவர்களுக்கு எளிதில் கிடைக்கக்கூடாத காரியங்கள் எதுவும் இல்லை" என்றும், அனுக்கிரகம் செய்திருப்பதால் அப் பேர்ப்பட்ட "ஸ்ரீ வனதுர்க்கை"யை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்ய முன்வந் திருப்பது நம் நாட்டின் நற்காலத்துக்குத்தான் என்று கொள்ள வேண்டும். ஆகவே அன்னார் திருவடிகளைப் போற்றி அவர்கள் இன்ன பல நற்பணிகளைச் செய்தும், நல்லாசி வழங்கியும், நாமும் நம்நாடும் செழித்தோங்க அருள்புரிய வேண்டுமென பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaidhianathaswamy Devasthanam, Vaithiswarankoil.

Paid a visit to the temple on 30th December, '65 with my family. We were taken round by Shri Nagalingam, Asstt. Supdt. The arrangements for reception are excellent and the temple is being maintained very well. There is real sprit of devotion which will regenerate future India and revive memories of our cultural heritage.

(Sd)

30—12—65. Dy. Director

Directorate General of Security,

R. K. Puram, New Delhi.

I was extremely happy to visit this sacred institution which is being maintained in an exemplary manner by the Dharmapuram Adheenam. The temple maintained by the Adheenam bear a special stamp about them which is always striking. Myself and my wife were overjoyed to spend a couple of minutes within this sacred premisses.

(Sd.) H. B. N. Shetty

18—1—66 Administrator, Karaikal.

வேளூர் தேவஸ்தானம் (வைத்தீஸ்வரன்கோயில்)

இலவச சித்த வைத்தியசாலை,

சித்த வைத்திய ஆராய்ச்சி

எங்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இலவச சித்த வைத்தியசாலையின் ஆராய்ச்சி நிலையத்தில் புராதன ஏட்டுச் சுவடியிலிருந்து இங்கு ஆராய்ச்சிகள் செய்து வருகின்றோம்.

நவபாஷாணைக்கட்டு என்ற முறை உருக்கிக்கட்டக்கூடியது. இதைச் செய்து பரிக்ஷார்த்தமாக அதில் கூறப்பட்ட வியாதிகளுக்கு உபயோகித்து வருகிறோம். இதில் பல கொடிய வியாதிகள் ஆரம்பகாலத்தில் குணப்படுத்த முடிகின்றது. நீண்ட காலமாகவுள்ள டி. பி. என்ற நோய் வேலூர், செங்கிப்பட்டி முதலிய இடங்களுக்கும் சென்றும் குணமாகாத சில நோயாளிகளுக்கும் இம்மருந்தைக் கொடுத்து வருகின்றோம். படிப்படியாகக் குணம் அடைந்து வருகின்றார்கள்.

இது நீரழிவு, மதுமேகம் போன்ற மேகசம்பந்தமான நோய்களையும் குணப்படுத்தலாம். இதுவும் ஆராய்ச்சியில் இருக்கின்றது. ஓலைச்சுவடிகளில் எழுதியுள்ள வாசகத்தை இதன் அடியில் குறிக்கின்றோம்.

உறுதிசேருமாதிக்கம் உறுப்பினமும் நரம்போர் ரக்தம்
ஊனத்தைநீக்குதலேமுக்கியம் குட்டம் நிவர்த்தி
வெறுப்பூட்டும் உடலமைப்பின் என்புமாதிஅறிந்தே
வேனதமிக்கி ஆயுள்முடிக்கும் ஈசனத்தைநீக்கும்
பெரும்பாஷாணதமைப்பின் மருத்திதுமற்றுயனைத்துவியாதி
பேதகத்தை நிவர்த்திப்ப மதுவிற்கலந்தேயளிக்கை
அளிக்கையாம் ஆராய்ந்தே சூரணத்து நவிதனக்குவந்தவாகை
அடுத்தாயமருந்து இருவிதியுமே கல்பமாக்கும்
சுளிக்காதும் பலவிதியில் ஆன்மாசுத்தமாக்கி
தோற்றத்திற்கு சாதகத்தே நரையைமாற்றும் திண்ணமாய்
அளவிதுஅனுதினவேயார்க்கும் சிவனும் நாமம் கிரந்தை
அதனிடைச் சூரணத்து அமையயிட்டலாலே
வலிமைதருவ லன்வேதையனைத்தும் நீக்கும்
இம்பொறிசவிட்டேமாய்க்கும் புறற்மைப்பின்வேதை
கேலமது இம்மருந்தாலும் நிவர்த்தியாதலுள்ள
காலாகாலம றிந்தேயித னையளித்தலாகும்.

அக்டோபர்மாதம் நம் வைத்தியசாலையில் மருத்துவ சிகிச்சை பெற்றவர்கள் விபரம்.

பெண்கள்	...	969
ஆண்கள்	...	915
குழந்தைகள்	...	532
		2316

அக்டோபர்மாதம் நோய் குணமானவர்கள் எழுதிய நற்சாட்சிப் பத்திரத்தில் ஒன்று இதனடியில் தரப்பட்டிருக்கிறது.

வைத்தீஸ்வரன்கோயில்.
26—10—65,

சகல ஆன்ம நேய நண்பர்களுக்கும் தெரிவிப்பது,

அடியேன் முன் மாதம் வைத்தீஸ்வரன்கோயில் சித்த வைத்திய சிகாமணி திரு. இராமகிருஷ்ணன் அவர்களைச் சந்திக்க சந்தர்ப்பமேற்பட்டது. இரண்டு மணி நேரம் வைத்தியசாலையில் தங்கி இருந்தபோது பல நோயாளிகள் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் மருந்து வாங்கிப் போய் உபயோகித்துவிட்டு சகல நன்மைகளையும் எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். வைத்தியர் அவர்கள் அன்போடு நோயாளிகளை வரவேற்று இதமான வார்த்தைகள் சொல்வதே அவர்களுக்குப் பாதி வியாதி சௌக்கியமான உணர்ச்சியோடு முகமலர்ச்சியோடு போய்வருகின்றார்கள்.

அடியேன் பல ஆங்கில டானிக், மாத்திரைகள், இன்னும் பல ஆயுர்வேத லேகியங்கள் சாப்பிட்டும் திருப்தியில்லாமல் இருந்தது. அவர் முறையில் தயார் செய்த தாதுபுஷ்டி லேகியம் உபயோகிக்கும்படி கொடுத்தார். அதைச் சாப்பிட்டவுடனே, அதன்குணம் தெரிய ஆரம்பித்தது. அதிலிருந்து தொடர்ந்து சாப்பிட்டு வருகிறேன். எவ்வளவு தூரம் பிரயாணம் செய்தாலும் எவ்வித ஆயாசங்களும் தோன்றாமல் எப்பொழுதும் புத்துணர்ச்சி அளித்து ஆனந்த மயமாகத் தோன்றுகிறது. இது உண்மை.

சித்த வைத்தியத்தை இவ்வளவு நல்ல முறையில் வளர்த்து வரும் தருமபுர ஆதீன சந்நிதானத்திற்கு எனது நன்றியையும், பிரார்த்தனையையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
அடியேன், ஆர். லக்ஷ்மிநாராயணன்,
Directer of Pondicherry Tex-tiles (P) Ltd.,
No. 5, Dumas Street, Ponndicherry
Selling Agent, Khanpur Mills.
Exporters Textiles Handicrafts to Germany.

பார்வையாளர் குறிப்பு.

My brother-in-law. Sri K. Kalyanasundam Pillai, aged 48 was suffering from abdominal Tuberculosis and Cirrhosis of the Liver for the last one year. He was given treatment in the Mission Hospital, Ramanathapuram and the Government Hospital Thanjavur and was dioganised as above. As a result of the treatment there was no appreciable improvement, but the health went on deteriorating day by day. On a particular day the condition of the patient was so bad that his health was declared dangerous and I was asked to take note of the same. At this point I broke of the treatment in the Hospital and gave him treatment through Dr. K. Ramakrishnan of Siddha Vaithiasalai run by Dharmapuram Adhinam at Vaithiswarankoil. After the patient was treated for two months he has now completely recovered and he is now building up his health. I had already good faith and firm belief in Siddha Vaithiam and the result of the treatment given to my brother-in-law has confirmed my faith and belief.

I wish that everybody extend full support to Siddha Vaithiam and help the propagation of the line of the treatment. I am very thankful to Dr. Sri K. Ramakrishnan to have saved the life of my brother-in-law. I am very much indebted to His Holiness Mahasannithanam of Dharmapuram Adhinam for having established the Siddha Vaithiasalai at Vaithiswarankoil at a huge cost of the Mutt.

(Sd.) N. Muthukumaraswamy,
Date: 18—12—65 Dy. Registrar of Co-op. Societies,
Mannargudy.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur.

திருக்கடவூர் கோயில் இந்து கோவில்களுக்கே ஒரு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது.

வாழ்க மகாசந்நிதானம்
வாழ்க பல்லாண்டு.

நானும் என் குடும்பத்தாரும் நண்பர்களும் நேற்றுமாலையும் இன்றுகாலையும் சுவாமி அம்பாள் தரிசனம் கிடைக்கும் பெரும் வாய்ப்பிற்கு நல் உதவிசெய்த தருமை ஆதீனகர்த்தா அதிகாரிகளுக்கும், கோயில் குருக்களுக்கும் என்மனமார்ந்த நன்றி.

(Sd.) S. Muthuramalingam,
30—1—66. Retd. Municipal Commissioner.
Turichi

மகாசந்நிதானம் மேற்பார்வையில் நடைபெறும் எல்லாக் கோவில்களும் இந்துக்கோவில்கள் எவ்வாறு இருக்கவேண்டுமோ அவ்வாறு சீருடனும் சிறப்புடனும் இருக்கின்றன. திருக்கடவூர் கோவிலும் மிகச்சிறந்த முறையில் இருப்பது மகிழ்ச்சிக்குரியது நானும் நண்பர்களும் இங்குவந்து சுவாமிதரிசனம் பெற்று மன நிறைவு பெற்றோம். மகாசந்நிதானத்திற்கும் அலுவலர்களுக்கும் குருக்களுக்கும் என்மனமார்ந்த நன்றி.

(Sd) தி. மாணிக்கவாசகம்
8—2—66. 'தமிழ்நாடு' நாளிதழ்
மதுரை

மடாதிபதிகள் மாநாடு

நமது சென்னை மாநிலத்திலுள்ள வேதாகம சம்பந்தமுடைய சமயத் தலைவர்கள் பலரும் அவரவர் வழியில் சமயத் தொண்டுகள் பலவற்றைச் செய்துவந்தனர். அவற்றை ஒருமுகப்படுத்தி ஒரு சீரான நிலைத்த திட்டத்தில் தொண்டுகளை அமைத்துக் கொள்ளுதல் கால நிலைக்கேற்புடைத்தாக இருக்கும் என அக் குருபீடங்களில் அமர்ந்து விளங்கும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களின் திருவுள்ளக்கிடக்கையாக இருந்தது. இதனை அறிந்த மாநில இந்து சமய அறநிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் அவர்கள் பல மடங்களுக்கும் சென்று கலந்து பிப்ரவரி 6, 7 தேதிகளில் சென்னையில் தமது அலுவலகத்தில் மடாதிபதிகள் கூடிக் கலந்து ஒரு முடிவு செய்ய வசதி செய்தார்கள்.

காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீமத் சங்கராசாரியார், திருவாவடுதுறை, தருமை, மதுரை ஆதீனங்கள், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், காஞ்சிபுரம் ஸ்ரீ ஞானப்பிரகாசர் ஆதீனம், மைலம் பொம்மையபாளைய ஆதீனம் இவற்றைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானங்களும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் அதிபரும், ஸ்ரீ காமகோடிபீடம் புதுப் பெரியவாளும் எழுந்தருளியிருந்தார்கள். அறநிலைய இலாகா அலுவலகத்தில் இதற்கென அலங்காரங்கள் செய்து ஒரு அழகிய கொட்டகையும் அமைக்கப்பட்டிருந்தது. ஆசனங்களும் இடப்பட்டிருந்தன.

குறித்தபடி 6—2—66 காலை 9 மணிக்கு எல்லோரும் எழுந்தருளி அமர்ந்தார்கள். தருமபுரம் சங்கீதபூஷணம் திரு. P. சுவாமிநாதன் திருமுறை பாடல் பாடப்பட்ட பின்னர் சங்கங்கள் ஒலிக்க மகாநாடு தொடங்கப்பட்டது.

முதலில் ஆணையரவர்கள் இக் கூட்டம் கூடியதன் முக்கியத்துவம் சிறப்பு நோக்கம் குறித்துப் பேசினார்கள். குறிப்பாக நமது இந்து சமயத்தைப் பேணிக் காத்து மத மாற்றங்களைத் தடுக்க ஒரு திட்டம் அமைத்துப் பணி செய்யவும் குருபீடங்கள் இந்த மாநிலத்தை அவரவர் வசதிக்கேற்ப பகுதி பகுதியாகப் பொறுப்பேற்று நடத்துதல் சிறப்பு என்பதையும் தெரிவித்துக் கொண்டார்கள். அங்கு எழுந்தருளியிருந்த மடாதிபதிகள் பல அனுபவங்களையும் செயல்முறைகளையும் எடுத்து மொழிந்தார்கள்.

எல்லோரும் சமயங்காக்க ஒருமுகப்பட்ட பிரசாரம் தேவை என்பதையும் அதற்கான வழிவகைகளைத் தேடவேண்டியதன் அவசியத்தையும் செய்வகையில் ஆலயங்களுக்கும் மடங்களுக்கும் பொறுப்பிருக்கிறதென்பதையும் வலியுறுத்தினார்கள். 7—2—66 அன்று சென்னை மாநில ஆளுநர் (Governer) உயர்திரு. கனம். சந்திரா ரெட்டிகாரு அவர்களும், முதலமைச்சர், "நல்லறங் காவலர்" கனம். திரு. M. பக்தவத்சலம் B. A., B. L., அவர்களும் காலப்போக்கை ஒட்டி மடங்கள் பல தொண்டுகளைச் செய்து வருகின்றன. மேலும், ஒருமித்துத் திட்டமிட்டுச் செய்தல் நன்மை பயக்கும் என்பதைத் தெரிவித்தார்கள். திட்டமிட ஒரு செயற் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. மேலே கண்ட நோக்கங்களைக் கொண்ட அறிக்கையும் அன்று வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்துக்கு ஆணையருக்கு உதவியாக முன்னாள் நமது மாநிலச் செயலாளர் (Chief Secretary) ஸ்ரீ வெங்கடேஸ்வரன் அவர்களும் தஞ்சை அறநிலையத் துணை ஆணையர் திரு. A. மார்க்கண்டவேல்ராஜன் அவர்களும் உடன் நின்று செயல் புரிந்தார்கள்.

இக் கூட்டத்தில் செய்தியாளர்களும் பொது மக்களும் அனுமதிக்கப்படவில்லை.

இக் கூட்டத்தில் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானமவர்கள் சமயப் பிரசாரத்தை முதலில் ஆலயத்தில் தான் தொடங்க வேண்டும். அவ்விதம் தொடங்கப்பெறும் ஆலயங்கள் செம்மையாகப் பரிபாலிக்கப்படல் வேண்டும். ஆலயக் கட்டிடங்கள் நல்ல முறையில் காப்பாற்றப்படுதல் வேண்டும். ஆலயம் செம்மைப்பட்டால்தான் நமது சமயம் உறுதிப்படும்; மக்கள் பயனுறுவர் என்பதை வலியுறுத்தினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் தொண்டைநாட்டுத் தல வழிபாடு

சென்னையில் கூடிய மடாதிபதிகள் மகாநாட்டுக்கு எழுந்தருளி தருமை மீளும் வழியில் 8—2—66 அன்று மாலை திருவக்கரை, திருஇரும்பைமாகாளம், திருஅரசிலி (ஒழிந்தியாப்பட்டு) ஆகிய தலங்களை வழிபட்டார்கள். இவை தொண்டைநாட்டுத் தலங்கள். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றவை. மிக அழகிய வேலைப்பாடுடையவை. ஆனால் சிதைந்த நிலையில் உள்ளன. இவற்றைப் பரிபாலிக்கும் டிரஸ்டிகள், ஊர்மக்கள் இவைகளில் திருப்பணி வேலைகளைத் தொடங்கி முடிப்பர் என நம்புகிறோம். ஆஸ்திகப் பெருமக்களும் முயற்சி எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

திருவக்கரை: வக்கராசுரன் பூசித்ததால் இத்தலம் திருவக்கரை என்ற பெயர்பெற்றது. இவ்வசுரன் இங்கு வசித்தான் என்பதற்குரிய பல அடையாளங்கள் உற்று நோக்கத்தக்கன. மூலலிங்கம் முகலிங்கம். திரேதாயுகத்திலிருந்து ஒவ்வொரு யுக முடிவிலும் ஒவ்வொரு முகமாக மூன்று முகங்கள் தோன்றியுள்ளன என்றும் நான்காவது முகம் கலியுக முடிவில் தோன்றும் என்றும் கூறுவர். வக்ராசுரனைக் கொன்ற தோஷம் நீங்க காளி பூசித்ததாகவும் தெரிகிறது. காளிக்குத் தனியே கோயில் உள்ளது. சுவாமி திருப்பெயர் - சந்திரசேகரர். அம்பிகை திருப்பெயர் - வடிவாம்பிகை. இதற்குத் திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் ஒன்று உள்ளது.

திருஅரசிலி: அரசமரத்தை இறைவன் இல்லாக உடைமையின் இப்பெயர் பெற்றது என்பர். இது இக்காலம் ஒழிந்தியாப்பட்டு என்று வழங்கப்படுகிறது. இறைவரின் திருப்பெயர் அரசிலிநாதர், திருஅரசிலிஆளுடையார். ஆலாலசுந்தரர் என்றும், திருஅரசிலி ஆளுடையார் என்றும் கூறப்படுகிறது. இறைவியின் திருப்பெயர் – பெரியநாயகி. வாமதேவமுனிவர் பூசித்துப் பேறுபெற்ற தலம். திருஞானசம்பந்தர் பாடிய பதிகம் ஒன்று உள்ளது. தீர்த்தம் – அரசடி தீர்த்தம்.

திருஇரும்பைமாகாளம்: மாகாளர் பூசித்த காரணத்தால் இது மாகாளம் எனப் பெயர்பெற்றது. இறைவியின் திருப்பெயர் குழல்மொழிநாயகி. திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் ஒன்று உள்ளது.

இம்மூன்று தலங்களிலும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களை ஆலய அறங்காவலர்கள் முதலியோர் வரவேற்று உடனிருந்து தரிசனம் செய்துவைத்தனர்.

விசேஷநாட்கள்

10—2—66 முதல் 10—3—66 முடிய

16—2—66	காரி நாயனார் திருநக்ஷத்திரம்
17—2—66	பிரதோஷம்
18—2—66	மஹாசிவராத்திரி
21—2—66	கோச்செங்கட்சோழநாயனார் திருநக்ஷத்திரம்
27—2—66	வேளூர்க் கிருத்திகை
4—3—66	பிரதோஷம்
6—3—66	மாசிமகம்
8—3—66	எறிபத்தநாயனார் திருநக்ஷத்திரம்

செய்திகள்

தருமையாதீனத்தில் :

மகாகும்பாபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஆனந்த பரவசர் பூங்காவில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வனதுர்க்கா தேவிக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் புதிதாக ஆலயம் எழுப்பப்பெற்று மகாகும்பாபிஷேகம் 4—2—66 அன்று சிறந்த முறையில் நிகழ்த்தப் பெற்றது.

சத்தி பேதங்கள் பலவற்றுள் ஒன்ருக விளங்குவது துர்க்கை. துர்க்கையை ஒன்பதுவிதமாக ஆகமங்கள் கூறுகின்றன. துர்க்கையை வெற்றித்தெய்வமாக மன்னர்கள் வழிபட்டுள்ளனர். வனதுர்க்கையைப் பழந்தமிழ் இலக்கியங்கள் காடுகிழாள் என்று கூறுகின்றன. இத் துர்க்காதேவி திருக்கோயில் மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு தனபூஜை, அனுக்ஞை, விக்னேஸ்வரபூஜை, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம் 'வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம்அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம் யாகசாலாப்பிரவேசம் முதலியன நடைபெற்றன. 1—2—66 செவ்வாய்க்கிழமை மாலை முதல் 4—2—66 வெள்ளிக்கிழமை காலை வரை ஆறுகாலம் யாகசாலை பூஜைகள் நடைபெற்றன. வெள்ளிக்கிழமைகாலை அரகரமுழக்கம், நாதஸ்வர இன்னிசை முதலிய முழக்கத்துடன் மகாகும்பாபிஷேகம்குறித்தகாலத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் மகாகும்பாபிஷேகத்திற்கு எழுந்தருளி வழிபாடாற்றினுர்கள். ஆயிரக்கணக்கான அன்பர்கள் வந்து மகாபூர்ணுகுதி வழிபாடும் கும்பாபிஷேக தரிசனமும் செய்து மகிழ்ந்தனர். அன்பர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் கும்பாபிஷேக மகாப்பிரசாதங்கள் வழங்கியருளிய பின்னர், திருமடத்திற்கு எழுந்தருளினுர்கள். அன்று ஸ்ரீவனதுர்க்கா தேவிக்கு மகாபிஷேகமும், மாலையில் சந்தனக்காப்பு அலங்காரமும் நவசத்தி அர்ச்சனையும் நடைபெற்றன.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 2—2—66 புதன்கிழமை முதல் மாலை 6 மணி முதல் சமயச் சொற்பொழிவுகள், தருமை

யாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்களாலும் பொறுப்பு முதல்வராலும் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், கொற்றவை வழிபாடு முதலிய தலைப்புக்களில் நிகழ்த்தப்பெற்றன. கும்பாபிஷேகத்தன்று இரவு சென்னை சமயப் பிரசார நிலையம் தேவார வகுப்பு ஆசிரியர், சங்கீத பூஷணம் திரு. பி. சுவாமிநாதன், சீகாழி தேவஸ்தானம் ஓதுவார், தேவார இசைமணி. திரு. சா. திருஞானசம்பந்தம் குழுவினரால் திருமுறை இன்னிசையரங்கு நிகழ்த்தப்பெற்றது.

திருக்கோயிலுக்குத்திருமுன்னர் பெரியஅளவில் கொட்டகை' பந்தல் இவை அமைக்கப் பெற்றிருந்தன. கொட்டகையில் யாகசாலை, தருமையாதீனத்திற் குரிய தனிச் சிறப்புடனும் வேலைப்பாடுகளுடனும் அழகிய அமைக்கப் பெற்றிருந்தது மேலும், தோரணம், வாசமாலை, மின்விளக்கு முதலியவற்றால் யாகசாலையும், திருக்கோயில் முன்புறப்பந்தலும் அழகு செய்யப் பெற்றிருந்தன. யாகசாலைகரு அண்மையில் ஒருபக்கம் வேத பாராயணமும், மற்றொருபக்கம் திருமுறைப் பாராயணமும் சமயச்சொற்பொழிவு முதலியனவும் நடைபெற்றன. திருமுறைப் பாராயணம் அகண்டபாராயணமாக நிகழ்ந்தது குறிப்பிடத் தக்கது. இரவு பகல் இருவேளைகளிலும் நிகழ்ந்த பாராயணம் அன்பர்களை வழிபாட்டில்ஈடுபடுத்துவதாயிருந்தது.

வேளூரில்

தைச் செவ்வாய்த் திருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 30—1—66 முதல் 8—2—66 முடிய உள்ள நாட்களில் ஸ்ரீசெல்வ முத்துக்குமாரசுவாமிக்குத் தைச் செவ்வாய்த் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. 30—1—66 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றமும், 3—2—66 வியாழக்கிழமை சகோபுரத்தில் மயில் வாகனக் காட்சியும், 7—2—66 திங்கட்கிழமை திருத்தேர்த் திருவிழாவும், 8—2—66 செவ்வாய்க்கிழமை சித்தாமிர்த தீர்த்தத்தில் கடைச்செவ்வாய்த் தீர்த்தங்கொடுத்தலும் துவஜாவரோகணமும் நடைபெற்றன. விழா நாட்களில் விசேஷ நாதஸ்வர இன்னிசை முதலிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன.

நாள்தோறும் மாலை 6 மணி முதல் கந்தபுராண விரிவுரைகளும் சமயச்சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியாராய்ச்சித்துறை, செஞ்சொற்கொண்டல், வித்துவான் திரு. சொ. சிங்காரவேலனார் எம். ஏ. கந்தபுராணம் - உற்பத்திகாண்டம் என்ற தலைப்பிலும், சென்னை குகஸ்ரீ ரசபதி கந்தபுராணம் - அசுரகாண்டம் என்ற தலைப்பிலும், பூம்புகார் கலைக்கல்லூரி திரு. சி. இராமலிங்கனார் எம். ஏ. கந்தபுராணம் - மகேந்திரகாண்டம் என்ற தலைப்பிலும், சென்னை 'திருக்கோயில்' ஆசிரியர் சித்தாந்தப் புலவர்மணி, புலவர், திரு. என். ஆர். முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்., கந்தபுராணம்-யுத்தகாண்டம் என்ற தலைப்பிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் தருமையாதீனப்புலவர் மகாவித்துவான், திரு. ச. தண்டபாணிதேசிகர் கந்தபுராணம்-தேவகாண்டம் என்ற தலைப்பிலும், கல்லிடைக்குறிச்சி, உபன்யாச சக்ரவர்த்தி, பிர்ம்மஸ்ரீ கே. எஸ். இராமகிருஷ்ண சாஸ்திரிகள் கந்தபுராணம் - தக்ஷகாண்டம் என்ற தலைப்பிலும் சிதம்பரம் பச்சையப்பன் உயர்பள்ளித்தமிழாசிரியர் வித்துவான், திரு. ச சேதுசுப்பிரமணிய பிள்ளை வேளூர் வைத்தியர் என்ற தலைப்பிலும், தருமையாதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், சிரோமணி, வித்துவான், திரு. வி. சபேசன் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி திருவருட்பா என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் பலர் வந்து தரிசித்தும் கேட்டும் உய்ந்தனர்.

ஆதீன தேவஸ்தானங்களில்

பாவை மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன தேவஸ்தானங்களில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளாணைப்படி பல ஆண்டுகளாக நடைபெறுகின்ற பாவை மாநாடு இவ்வாண்டும் சிறந்த முறையில் நடைபெற்றது.

சீகாழியில்

சீகாழி ஸ்ரீசட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் 6, 7, 8—1—66 ஆகிய மூன்று நாட்களிலும் மாலை 6 மணி முதல் பாவைமாநாடு தொடங்கி நடைபெற்றது. திருவெம்பாவைப் பாடல்கள் பண்ணிசையுடன் ஓதப்பெற்றன.

6—1—66 வியாழக்கிழமையன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மொழியியல்துறை, பல்கலைச் செல்வர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்., பாவை

நோன்பு, என்ற பொருளிலும், திருவாசகமணி, திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., 'ஏழை பங்காளனையே பாடு' என்ற பொருளிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மொழியியல்துறை செஞ்சொற்கொண்டல் வித்துவான் திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., 'ஏதவனைப் பாடும் பரிசு' என்ற பொருளிலும் சொற்பொழிவாற்றினர். 7—1—66இல் திருக்கோயில் ஆசிரியர் சித்தாந்தப்புலவர் மணி, திரு. என். ஆர். முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்., எங்கெழிலென் ஞாயிறு என்ற தலைப்பிலும், திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி தமிழ்ப்பேராசிரியர், வித்துவான். திரு. கு. சுந்தரமூர்த்தி திருப்பள்ளியெழுச்சி என்ற தலைப்பிலும். சென்னை குகஸ்ரீ ரஸபதி என்னகுறையு மிலோம் என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினர். 8-1-66இல் கலைமகள் ஆசிரியர் செந்தமிழ்ச்செல்வர் வித்துவான். திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ., அரும்பெருஞ்ஜோதி என்ற பொருளிலும், சிதம்பரம் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான். திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை இத்தனையும் வேண்டும் என்ற தலைப்பிலும், நாகப்பட்டினம் தேசீய உயர்பள்ளித் தமிழாசிரியர், தருமையாதினப் புலவர் வித்துவான். திரு, வை. மு. சண்முக தேசிகர் கண்ணுக்கினியான் என்ற தலைப்பிலும், தருமையாதினப் பல்கலைக் கல்லூரி (பொறுப்பு) முதல்வர் திருநெறிச்செம்மல் வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அருள்மழை என்ற தலைப்பிலும் சொற்பெருக்காற்றினர். அன்பர்கள் பலர் கலந்துகொண்டு கேட்டு மகிழ்ந்தனர்.

வேளூரில்

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 5, 6, 7—1—66 ஆகிய மூன்று நாட்களிலும் பாவை மாநாடு சிறந்த முறையில் மாலை 6 மணி முதல் நடைபெற்றது. மாநாட்டுத் தொடக்கத்தில் திருவெம்பாவைப் பாடல்கள் பண்ணிசையுடன் ஓதப்பெற்றன. அன்பர்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

5—1—66 புதன்கிழமையன்று திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் வித்துவான். திரு. கே. எம். வேங்கடராமையா எம். ஏ. பி. ஓ. எல். சமயகுரவர்கள் என்ற தலைப்பிலும், தருமையாதினப் பல்கலைக் கல்லூரி (பொறுப்பு) முதல்வர் திருநெறிச்செம்மல் வித்துவான். திரு, வி. சா. குருசாமி தேசிகர் திருப்பள்ளியெழுச்சி என்ற தலைப்பிலும், திருவையாறு செய்தியாளர் சமயப்பிரசாரகர் திரு. ஜி. தளவேல் பிள்ளை பாவை

நோன்பு என்ற தலைப்பிலும், 6—1—66 வியாழக்கிழமை திருக்கோயில் ஆசிரியர், சித்தாந்தப்புலவர்மணி, புலவர், திரு. என். ஆர், முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல். மார்கழி நீராடல் என்ற தலைப்பிலும், திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான். திரு. கு. சுந்தரமூர்த்தி முன்னைப்பழம் பொருள் என்ற தலைப்பிலும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், தருமையாதீனப் புலவர் சித்தாந்தக்கலைமணி வித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார் மொய்யார்தடம் பொய்கை என்ற தலைப்பிலும், 7—1—66 வெள்ளிக்கிழமை திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். திருவெம்பாவை என்ற தலைப்பிலும், நாகப்பட்டினம் தேசீய உயர்பள்ளித் தமிழாசிரியர் தருமையாதீனப் புலவர், வித்துவான். திரு. வை. மு. சண்முக தேசிகர் கண்ணைத்துயின்றவமே காலத்தைப் போக்காதே என்ற தலைப்பிலும், சிதம்பரம் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான் திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை எங்கும் இலாததோர் இன்பம் என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். 7—1—66 வெள்ளிக்கிழமை பண்ணிசைவாணர்களின் பண்ணிசை முழக்குடன் திருமுறை வீதியுலா நிகழ்ந்தது.

திருவையாற்றில்

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் விசுவாவசு ஆண்டு மார்கழித் திங்கள் 17, 18 ஆம் நாட்களாகிய (1, 2—1—66) சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6 மணி முதல் திருவெம்பாவை மாநாடு நடைபெற்றது. அவ்வமயம் திருவெம்பாவைப் பாடல்கள் பண்ணிசையுடன் ஓதப்பெற்றன. அறிஞர்கள் பலர் விரிவுரையாற்றினர். அன்பர்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

திருபுவனத்தில்

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் விசுவாவசு ஆண்டு மார்கழித் திங்கள் 16, 17 ஆம் நாட்களாகிய (31—12—65, 1—1—66) வெள்ளி, சனிக்கிழமைகளில் மாலை 6 மணி முதல் திருவெம்பாவை மாநாடு நடைபெற்றது. அவ்வமயம் திருவெம்பாவைப் பாடல்கள் ஓதப்பெற்றன. அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். 31—12—65 அன்று நாகப்பட்டினம் தேசீய உயர்பள்ளித் தமிழாசிரியர் தருமையாதீனப் புலவர், வித்துவான். திரு. வை. மு. சண்முக தேசிகர் குழுவினரால் மாணிக்கவாசகர் வரலாறு கதா காலக்ஷேபமாக நிகழ்த்தப்பெற்றது. அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

திருக்குவளையில்

திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் விசுவாவசு ஆண்டு மார்கழித் திங்கள் 18, 19 ஆம் நாட்களாகிய (2, 3—1—66) ஞாயிற்றுக்கிழமை திங்கட்கிழமைகளில் மாலை 6 மணி முதல் பாவை மாநாடு நடைபெற்றது. அவ்வமயம் திருவெம்பாவைப் பாடல்கள் பண்ணிசைகளுடன் ஓதப்பெற்றன. அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

திருக்கடவூரில்

திருக்கடவூர் ஸ்ரீஅமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் விசுவாவசு ஆண்டு மார்கழித் திங்கள் 20, 21 ஆம் நாட்களாகிய (4, 5—1—66) செவ்வாய்க்கிழமை புதன்கிழமைகளில் மாலை 6 மணி முதல் பாவை மாநாடு சிறப்பாக நடைபெற்றது. திருவெம்பாவைப் பாடல்கள் பண்ணிசையுடன் ஓதப்பெற்றன. அறிஞர்கள் பலரின் சொற்பொழிவும், கதாகாலக்ஷேபமும் நடைபெற்றன. ஒவ்வொரு நாளும் அன்பர்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

பேரளத்தில்

பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானத்தில் விசுவாவசு ஆண்டு மார்கழித் திங்கள் 18 ஆம் நாள் (2—1—66) ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி முதல் திருவெம்பாவைச் சொற்பொழிவு நடைபெற்றது. அவ்வமயம் திருவெம்பாவைப் பாடல்கள் பண்ணிசையுடன் ஓதப்பெற்றன. சென்னை நியூ காலேஜ் பேராசிரியர், பாலூர் திரு. கண்ணப்ப முதலியார் எம்.ஏ. இருபாவைகளில் ஒருபெருங் குறிக்கோள் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். அன்பர்கள் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

திருப்பனந்தாளில் :

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 7, 8—1—66 ஆகிய வெள்ளி சனிக்கிழமைகளில் பாவை மாநாடு நடைபெற்றது. அவ்வமயம் திருவெம்பாவைப் பாடல்கள் பண்ணிசைவாணர்களால் பண்ணிசையுடன் ஓதப்பெற்றன.

7—1—66 வெள்ளிக்கிழமை மாலை 6-மணி முதல் சொற்பொழிவு தொடங்கப்பெற்றது. சென்னை கலைமகள் ஆசிரியர் செந்தமிழ்ச்செல்வர் வித்துவான். திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ.,

"கண்ணுக்கினியான்" என்ற தலைப்பிலும், தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி பொறுப்பு முதல்வர் திருநெறிச்செம்மல் வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் "திருப்பள்ளி யெழுச்சி" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர்.

8—1—66 சனிக்கிழமை மாலை சென்னை திருக்கோயில் ஆசிரியர் சித்தாந்தப்புலவர் மணி, புலவர். திரு. என். ஆர். முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல். "பாவைப் பாடல்கள்" என்ற பொருளிலும், சென்னை குகஸ்ரீ. ரஸபதி "மார்கழி நீராடல்" என்ற பொருளிலும் சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் பலர் வந்து கேட்டு பாவைப் பாடற்பொருளையும் பயனையும் உணர்ந்து மகிழ்ந்தனர்.

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையச் சார்பில்

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தல யாத்திரை

சென்னை, தருமை ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலைய வழிபாட்டுக் குழுவினர் அறுபதின்மர் ஒரு பஸ் மூலம் 22—12—65 முதல் 28 - 12—65 முடிய சோழநாட்டில் காவிரித் தென்கரையில் உள்ள பாடல் பெற்ற 127 தலங்களுள் மேற்குப் பகுதியில் உள்ள 28 தலங்களையும் வரலாற்றுச் சிறப்புமிக்க தஞ்சை இராஜராஜேச்சரம், தாராசுரம் ஆலயம், வயலூர் முருகன் கோயில் முதலியவற்றையும் வழிபட்டு ஆங்காங்கும் சமயப் பிரசாரம் நிகழ்த்தினர். தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஆதீன ஆட்சியில் உள்ள திருக் கோயில்களில் வழிபாட்டிற்கும், சமயப் பிரசாரத்திற்கும், உண்டி உறையுளுக்கும் தக்க ஏற்பாடு செய்வித்தருளினுர்கள். சென்னை மாநில சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் விருப்பத்திற் கிணங்க தஞ்சைத் துணை ஆணையர் திரு. ஏ. மார்க்கண்டவேல் ராஜன் அவர்கள் யாத்திரை செய்யும் தலங்களுக்கெல்லாம் முன் கூட்டியே சுற்றறிக்கை விடுத்து வழிபாட்டையும், சமயப்பிரசாரத் தையும் சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். தொழில் அதிபர் திரு. என். மகாலிங்கம் எம். எல். ஏ., சென்னை, முன்னுள் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவர் திரு. வி. இரத்தின முதலியார், தருமை ஆதீன வித்துவான் திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை ஆகியோர்

22—12—65 விடியற்காலையே வந்து வழிபாட்டுக்குழுவினரை வாழ்த்துரை கூறி வழியனுப்பி வைத்தார்கள். " சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்கள் " முதல் பகுதி புத்தகம் தல வரலாறு, தேவாரத் திருப்பதிகங்களுடன் கூடியதை திரு. என். மகாலிங்கம் அவர்கள் வெளியிட்டார்கள். மேற்படி புத்தகம் குழுவினர் பொருட்செலவில் வெளியிட்டிருப்பது போற்றத் தக்கது என்றும், மேற்படி புத்தகத்திற்கு ஒரு ரூபாய் விலை வைத்திருப்பதும், அவ்விற்பனைத் தொகை திருவாரூர் ஸ்ரீஅப்பர் சுவாமிகள் ஆலயத்தில் கட்டப்பெற்றுவரும் ஸ்ரீ மாதினியார் சிவ பூஜை நிலையத் திருப்பணிக்கு அளிக்கப் பெறுவதும் பாராட்டத் தக்கது என்றும் குறிப்பிட்டு முதல் புத்தகத்தைத் தாமே விலை கொடுத்துப் பெற்றுக்கொண்டார்கள்.

22—12—65ல் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை ஸ்ரீ மாணிக்க விநாயகர்கோயில் உச்சிப் பிள்ளையார்கோயில், ஸ்ரீ தாயுமானவர் கோயில், வயலூர் ஸ்ரீசுப்பிரமணியசுவாமிகோயில், உய்யக்கொண்டான் (திருக்கற்குடி) ஸ்ரீ உஜ்ஜீவநாதசுவாமி கோயில், உறையூர் ஸ்ரீ பஞ்சவர்ணேஸ்வரர் கோயில் ஆகிய வற்றில் வழிபாடும், சமயப் பிரசாரமும் சிறப்பாக நடைபெற்றன. திருச்சி மலைக்கோட்டையில் தருமையாதீனம் மௌன மடத்துத் தொண்டர்களும், தேவஸ்தானத் தொண்டர்களும், சிவாசாரியர்களும் பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்று வழிபாட்டைச் சிறப்பாக நடத்திவைத்தனர். மௌன மடத்தில் பகல் மாகேஸ்வர பூசையும், இரவும், மறுநாட்காலையும் சிற்றுண்டிகளும் அளித்து உபசரித்தார்கள்.

வயலூரில் நிர்வாக அதிகாரி திரு. டி. எம். பெரியசாமி பிள்ளை, திருப்பணிக் கமிட்டிச் செயலாளர், ஸ்ரீ மறைஞானசிவம் சுவாமிகள் முதலியோர் வரவேற்று உபசரித்தனர். உய்யக் கொண்டான், ஆலயத்தில் தருமையாதீனம் மௌன மடம் கட்டளை சூப்பரின்டெண்டெண்ட் திரு. சிதம்பரம் முதலியார், சிவாசாரியர் ஆகியோர் வரவேற்று வழிபாட்டை நன்கு நடத்தி வைத்தனர். உறையூரில், நிர்வாக அதிகாரி குமாரி அமிர்த கௌரி, நிர்வாக அறங்காவலர் ஆகியோர் வரவேற்று வழிபாட்டையும் சமயப் பிரசாரத்தையும் நடத்தி வைத்தனர்.

(தொடரும்)

எதிர்காலம் - திரு. கே. முத்துஜோதிடர்

(விசுவாவசுஞூ மாசிமீ 1உ முதல் 30உ முடிய)

(12—2—66 முதல் 13—3—66 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் ஆரோக்யத்தைத்தரும், நஷ்டமான பொருள் தானுக வந்து சேரும். தூரதேச பிரயாணத்தைக் கொடுக்கும், வெகுநாளாக எதிர்பார்த்து நடக்காமல் இருந்த காரியம் நடக்கும். நூதன ஜீவன லாபம் கிடைக்கச்செய்யும். சனி, செவ்வாய் சுபமாகும்.

2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் சுபத்தைத்தரும். நூதனமான ஜீவன லாபத்தைத் தந்து இடம்மாறச் செய்யும், ரோகிணி நான்கு பாதங்களும் மிருகசீர்ஷம் 1, 2 பாதங்களும் மிச்ரபலனைத் தரும். அலைச்சல் அதிகமாகும். செய்காரியங்கள் தவக்கத்தோடு பூர்த்தியாகும். இஷ்ட தேவதா பிரார்த்தனையும் புண்ணிய க்ஷேத்திராடனமும் கிடைக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபசந்தோஷத்தைத் தரும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும் அடிக்கடி வெளியூர்ப் பிரயாணம் ஏற்படும். ஆரோக்யம் உண்டுபண்ணும், இல்லற சுகம் ஓங்கும். திங்கள், புதன் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் மிச்ரபலனையே தரும். விவசாயத்தில் தான்ய விருத்தியில் கொஞ்சம் குறைகாட்டும். ராஜாங்க மூலமாய் விவகாரம் வெற்றியடையும், கட்டடவேலைகள் ஏற்படும், ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். வெள்ளி, சனி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் சுபமேயாகும். ஜீவனம் ஓங்கும்; விவாகாதி சுப காரிய பிரயத்னங்கள் அதிகமாகும்; மேலோர் பெரியோர்களின் அன்பினால் சகல காரியங்களும் வெற்றியடையும். தெய்வபலம் முன்னின்று காக்கும். ஆரோக்கியம் உண்டு பண்ணும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்ரபலனைத்தரும். கிராம பூமிகளில் லாபக் குறைவு காட்டும். சகல காரியங்களும் தவக்கத் தோடு நடைபெறச்செய்யும். உஷ்ணதிக்கத்தால் நேத்திரபீடை காட்டும். இராஜாங்க மூலமாய் பூர்ண அனுகூலத்தோடு சகல காரியங்களும் வெற்றி அடையும். தெய்வபலம் முன்னின்று காக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$.

துலாராசி 9 பாதங்களும். தொழில் ஓங்கும். வெகுநாளாய் எதிர்பார்த்து, நடவாத காரியங்கள் எல்லாம் சுலபமாக நடக்கும். ஆரோக்யம் உண்டாகும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். சனி, ஞாயிறு சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$-அனுஷம்-கேட்டை

விருச்சிக ராசியில் கேட்டை நான்கு பாதம் தவிர மற்ற மற்ற பாதங்கள் சுபமிராது, சதா குடும்பத்தொல்லைகள். இருந்துகொண்டு இருக்கும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படும், ஆரோக்யக் குறைகாட்டும். கேட்டை நான்கு பாதங்கள் சுபத்தையே தரும். இல்லறசுகம் ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமேயாகும். யக்ஞயாகாதி பிரதிஷ்டா பலன்களைத் தரும். உலகில் நன்மதிப்பும் தொழில் ஏற்றமும் ஏற்படச்செய்யும், ராஜாங்க மூலமாய்ப் பூர்ணமாக அனுகூலம் ஏற்படும். துர்பிக்ஷம் நீங்கி சுபிக்ஷம் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

10 மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் மேல்பதவியைத்தந்து, உத்தியோக லாபத்தைத்தரும், இல்லற சுகம் ஓங்கும், ஆரோக்யம் உண்டாகும், நூதன வஸ்திராபரணச் சேர்க்கையும் ஸ்தாவர ஜங்கம சொத்துக்களும் சேரும். தெய்வபலம் முன்னிற்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் ½, சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரபலனைத் தரும், அதிக உழைப்பு உண்டாகும், கன்றுகாலிகள் சேரும், புண்ணிய தீர்த்தாடனங் களும் தேவ தரிசனங்களும் ஏற்படும், குடும்பம் ஓங்கும், ஞாயிறு திங்கள் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபமேயாகும், தொழில் ஓங்கும், உத்தியோகத்தில் மேல் பதவிகளைத் தரும், நஷ்டமான பொருள் தானுக வந்துசேரும், புத்திராதிகளால் நன்மை உண்டாகும், குடும்பத்தில் சுபகாரியங்கள் ஏற்படும், இல்லற சுகம் ஓங்கும், தெய்வபலம் முன்னின்று காக்கும். சனி. ஞாயிறு சுபமாகும்.

குறிப்பு:- கனதனவான்களுக்கும் மேலோர் பெரியோர் களுக்கும் மிகுந்த வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்வதாவது தை மாதத்தில் 2ம் தேதி சனி பகவான் மேற்கே அஸ்தமனத்தை யும்; 8ம் தேதி அங்காரக பகவான் மேற்கே அஸ்தமனத்தையும்; 26ம் தேதி புதபகவான் மேற்கே வக்ராஸ்தமனத்தையும்; ஒரே திக்கில் ஒரே மாதத்தில் அடைவதாலும், அமாவாசையன்று சூரியன், சந்திரன், செவ்வாய், சுக்ரன், சனி இந்த ஐந்துபேர் களும், கும்ப ராசியில் சேருவதாலும்; உலகத்தை எதிர்நோக்கி நிற்கும் சகல பயங்களும் யக்ஞயாகாதிகளின் பலத்தாலும் லக்ஷ கோடி அர்ச்சனைகளுடைய பலத்தாலும், பெரியோர்களின் தபோ பலத்தாலும், தெய்வ பலம் முன்னிற்கவேணு மாகையால், சகலமான பிரஜைகளும் பூர்ணமாக நம்பிக்கையுடன் கடவுளையே நம்பிக்கொண்டு ஸ்வப்பனத்திலும் கெடுதல்களை நினைக்காமல் (சதா தெய்வ சிந்தனையாகவே இருந்து கொண்டு அவரவர்களின் கடமைகளை மிகுந்த பயபக்தியுடன் செய்து கொண்டு நவக்கிரங்களையும் தேவதைகளையும் சதா திருப்தி செய்துகொண்டேவர நமது பாரத பூமி செழித்து ஓங்கி சகல பிரஜைகளுக்கும் சமஸ்தமான மங்களத்தையும் உண்டுபண்ணும்.

சுபமஸ்து.